# திருமறைத்தீபம்



**BIBLE LAMP**
**திருமறைத்தீபம்**

**Issue No.3 of 2008**
**ISBN 1173-7255**

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Mt. Wellington, Auckland 1641
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www.biblelamp.org

“கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்.”

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

# வாசகர்களே!

*கண்விழித்துக் கண் மூடுவதற்குள் பாதி வருடத்தைக் கடந்துவிட்டோம். கடந்தது அரை வருடமாக இருந்தாலும் அளவற்ற துன்பங்களை மனித குலம் கண்டிருக்கிறது. ஜிம்பாப்வே நாட்டில் கொடுங்கோலாட்சி செய்து மக்களைக் கொடுமைப்படுத்தி வருகிறான் முகாபே. சூறாவளிக்காற்று மியான்மார் நாட்டில் 175,000 பேரை அழித்து பல மில்லியன் மக்களை அகதிகளாக்கியிருக்கிறது. அந்நாட்டை ஆளும் சுயநலமிக்க இராணுவ ஆட்சியோ மக்களுக்கு எந்நலனும் கிடைக்கமுடியாதபடி வெளிநாட்டுதவிகளை ஏற்க மறுத்துவிட்டிருக்கிறது. சீனாவில் நிலநடுக்கம் 60,000 பேரைக் கொன்று சில மில்லியன் தொகை மக்களை அகதிகளாக்கியிருக்கிறது.*

*இயற்கையின் பாதிப்பும், மனிதனின் பாவச் செயல்களின் அகோரமும் உலகை ஆட்டிப் படைத்தாலும் அசைய மாட்டேன் என்று பாவத்தில் தொடர்ந்து நீச்சலடிக்க மனிதன் முயல்கிறான். தேவ வல்லமையோடு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உள்ளது உள்ளபடியாக, பரிசுத்த ஆவியின் வல்லமையோடு தொடர்ந்து பிரசங்கிக்க வேண்டியது சபைகளின் கடமை. கிறிஸ்து இயேசுவினால் அல்லாமல் மனிதனுக்கு விடுதலை வரமுடியாது. பாவ விடுதலையை அடையாமல் கர்த்தரின் சமாதானத்தை எவரும் பெறமுடியாது. உலகத்துக்கு விடுதலை பொருதாளார, தொழில்நுற்ப வளர்ச்சியினாலோ அல்லது பசுமைப் புரட்சியினாலோ வரமுடியாது. இயேசு மட்டுமே இந்த உலக மக்களுக்கு நிலையான வாழ்வை அளிக்கமுடியும்.*

*இந்த இதழில் ஜோன் சார்ள்ஸ் ரைல் எனும் பத்தொன்பதாம் நூற்றாண்டு சீர்திருத்த போதகரை அறிமுகப்படுத்தியிருப்பதோடு மலைப்பிரசங்கத்தைப் பற்றிய அவருடைய வேதவிளக்கவுரையையும் தந்திருக்கிறோம். ரைல் மத்தேயு சுவிசேஷத்துக்கு அளித்துள்ள விளக்கவுரையை விரைவில் நூலாக தமிழில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். அப்பணிக்காக ஜெபியுங்கள். அத்தோடு பிரசங்கிப்பவர்களுக்கும், பிரசங்கம் கேட்பவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய ஒரு ஆக்கமும் இதில் வந்திருக்கிறது. இவ்விதழை வாசிக்கும் ஒவ்வொருவரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக. - ஆசிரியர்.*

# ஜோன் சார்ள்ஸ் ரைல்

## - பத்தொன்பதாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ தலைவர் -

ஜோன் சார்ள்ஸ் ரைல் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் திருச்சபையில் போதகராக இருந்தார். ரைல் 1816ல் பிறந்தார். அவர் 1890ம் ஆண்டில் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தபோது இங்கிலாந்திலிருந்த ஆங்கிலிங்கன் சபைப்பிரிவினரைத் தவிர வேறு எவரும் அவரை ரைலை அறியாதிருந்தார் கள். அவருடைய மறைவுக்குப் பிறகு அவருடைய நூல்களைப் பலர் வாசிக்க ஆரம்பித்தார்கள். அவருடைய பெயரும் பிரபல மாகியது. ரைலைப் பற்றி குறிப்பிட்ட ஒரு ஆங்கிலிக்கன் இறையியல் வல்லுனர், அவருடைய நூல்கள் பன்னிரெண்டு மில்லியன்களுக்கு விற்பனையானதாகவும், ஒரு டஜனுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதாகவும் தொடர்ந்தும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டு வருவதாகவும் கூறியுள்ளார். ரைல் எழுதி ஆங்கிலத்தில் இருக்கும் Holiness, Five English Reformers, Great leaders of the eighteenth century ஆகிய நூல்களை வாசித்திராத ஆங்கிலப் போதகர்கள் இருக்க முடியாது. ரைல் வாழ்ந்த காலத்திலேயே சார்ள்ஸ் ஸ்பர்ஜன், ஹட்சன் டெய்லர் போன்றோரும் வாழ்ந்திருந்தனர்.

### குழந்தைப் பருவமும், மனந்திரும்புதலும்

இங்கிலாந்தில் மெக்கல்ஸ்பீல்ட் என்ற இடத்தில் 1816ல் ஜோன் சார்ள்ஸ் ரைல் பிறந்தார். சமுதாயத்தில் மிகவும் நல்ல நிலையிலும், செல்வப் பெருக்குமுள்ள ஒரு குடும்பத்தில் அவர் பிறந்தார். அவருடைய தாத்தாவின் சொத்து பின்பு ரைலின் தகப்பனாரைச் சென்றடைந்தது. ரைல் அத்தகைய குடும்பத்தில் எந்தவிதக் குறைபாட்டுக்கும் இடமில்லாமல் வளர்ந்து வந்தார். இங்கிலாந்தின் பார்ளிமென்டில் அங்கத்தவராக வரவேண்டுமென்பது ரைலினுடைய இளவயது விருப்பமாக இருந்தது. அதையே அவருடைய குடும்பமும் விரும்பியது. ரைல் பிரபலமான Eten கல்லூரியில் கல்வி பயின்று பின்பு 1834ல் Oxford பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அங்கே அவர் திறமை வாய்ந்த மாணவராக இருந்தார். அநேக சிறப்புப் பரிசுகளை அங்கு பெற்ற ரைல் தன்னுடைய சக மாணவர்கள் மத்தியில் மதிப்புப் பெற்றவராக இருந்தார். அவர் ஆறடிக்கு மேல் உயரமாகவும், அகன்ற தோள்களுடன் மிகவும் அழகு நிரம்பிய ஆண்மகனாக இருந்தார். பல்கலைக்கழக கிரிக்கெட் டீமின் தலைவராக இருந்து சிறப்பாக ஆடிய ரைல் ஒரு முக்கிய ஆட்டத்தில் பத்து விக்கெட்டுக்களை எடுத்திருந்தார். பல்கலைக்கழகத்தின் பிரபலமான படகோட்டத்திலும் ரைல் பங்கு பற்றி ஜொலித்தார்.

*21ம் வயதில் ரைலுக்கு சுவாசப்பையில் நோய் ஏற்பட்டது. அது குணமாக அவர் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தபோது அவர் வேதப்புத்தகத்தை வாசிக்க ஆரம்பித்தார். அதற்கு முன் பதினான்கு வருட காலமாக வேதத்தைத் தான் தொட்டிருக்கவில்லை என்று ரைலே குறிப்பிட்டிருக்கிறார். ஒரு ஞாயிறு தினம் அவர் ஆக்ஸ்போர்டில் ஒரு சபைக்குப் போனார். அங்கே எபேசியர் 2:8ம் வசனம் வாசிக்கப்பட்டதை ரைல் கேட்டார். "கிருபையி னாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;" அவ்வேளை பரிசுத்த ஆவியான வரின் கிரியையினால் தன்னுடைய பாவத்தை அவர் ஆழமாக உணர்ந்தார். அந்தப் பாவ உணர்தல் கிருபையின் மூலமான மனந்திரும்புதலையும் அவருடைய வாழ்க்கையில் கொண்டுவந்தது. அன்றிருந்து இந்த உலகத்தைவிட்டு மறையும் வரையும், கர்த்தருடைய வார்த்தை ஜீவனுள்ளதும், வல்லமையானதுமாய் இருபுறமும் பட்டைதீட்டப்பட்ட வாளாயிருக்கின்றது என்ற நம்பிக்கை ரைலின் இருதயத்தைவிட்டு நீங்கவில்லை.*

## ஆரம்பகாலப் பணிகள்

*பல்கலைக்கழகப் படிப்பை முடித்தபின் ரைல் தன்னுடைய பெற்றோர்களுடன் இருந்து பார்ளிமெண்டில் தெரிவுசெய்யப்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். ஒரு நாள் அதிகாலையில் தந்தை நடத்திவந்த வங்கி கவிழ்ந்துவிட்டதென்ற செய்தி அவரை நித்திரையில் இருந்து எழுப்பியது. 1841ல் அவருடைய தந்தையின் வங்கி கட்டவேண்டிய கடன்களைக் கட்டமுடியாததால் மூடப்பட வேண்டிய நிலையை எட்டியது. ஒரே நாளில் ரைலின் குடும்ப சொத்தான பெரிய எஸ்டேட்டும் செல்வமும் அவர்களைவிட்டு அகன்றன. இந்த நிகழ்ச்சி ரைலினுடைய வாழ்க்கையை இறுதிவரை பாதித்திருந்தது. இதுபற்றி எழுதிய ரைல், "ஒரு நாள் அதிகாலையில் வழமையாக நடப்பது போன்ற அத்தனை நிகழ்ச்சிகளும் இந்த உலகத்தில் நிகழ படுக்கையில் இருந்து எழுந்தேன். அதே நாளிரவு எல்லாவற்றையும் இழந்தவனாக படுக்கைக்குப் போனேன். இது எனக்கு மிகுந்த கசப்பையும், வலியையும் தந்ததோடு பெரும் அவமானத்தையும் ஏற்படுத்தியது."*

*செல்வமிக்க குடும்பத்தில் பிறந்த ரைல் தான் மற்றவர்களைப்போல உழைத்து வாழவேண்டிய நிலை ஏற்படும் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. இப்போது வாழ்க்கையில் முதல்தடவையாக வாலிபனாக இருந்த ரைலுக்கு ஒரு தொழில் தேவைப்பபட்டது. ஆக்ஸ்போர்ட் படிப்பும், மனந்திரும்புதலும் அவரை தேவனுடைய ஊழியத்தை நாடும்படித் தூண்டின. இருபத்தைந்து வயதில் ரைல் இங்கிலாந்து ஆங்கிலிக்கன் திருச்சபையில் போதகராகப் பணியேற்றார். அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த மிகக் கசப்பான அனுபவம் இறுதியில் நல்லதிலேயே போய் முடிந்தது. ரைலுக்கு மேலிருந்த சபைத்தலைவர் அவரை எக்ஸ்பெரி* (Exbury) *என்ற இடத்திற்குப் பணிபுரிய அனுப்பிவைத்தார். அவருக்கு 27 வயதாயிருந்தபோது அவர் வின்செஸ்டர்* (Winchester) *என்ற இடத்துக்கு மாற்றப்பட்டார். சில மாதங்களுக்குப்பிறகு அவர் மறுபடியும்*

ஹெல்மிங்கெம் (Helmingham) என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கே தன்னுடைய நாற்பதாம் வயதுவரை ரைல் பணிபுரிந்தார். ஹெல்மிங்கெம் ஒரு சிறிய ஊராக இருந்தது. அங்கே ரைல் வாசிப்பதற்கு அதிக நேரம் கிடைத்தது. அங்கிருக்கும்போது அவருக்கு வரலாற்றில் திருச்சபையில் சிறப்பாகப் பணிபுரிந்திருந்த சபைத்தலைவர்களின் வரலாற்று நூல்கள் கர்த்தரின் வழிநடத்துதலால் கிடைத்தன. இந்நூல்கள் ரைலினுடைய ஊழியத்திற்கும், பிரசங்கத்திற்கும் அதிக வளம் சேர்த்து மேன்மைப் படுத்தின. ரைலுக்கு பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டு சபைத் தலைவர்களை நன்றாகப் பிடித்திருந்தது. வேல்ஸின் ரோலன்ட், பதினேழாம் நூற்றாண்டுப் பியூரிட்டன் தலைவர்களான ஸ்டீபன் சார்நொக், ஜோன் பனியன், பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்தவாதி களான ஜோன் கல்வின், மார்டின் லூதர், ஜோன் நொக்ஸ், கிரேன்மர் ஆகியோரும் அவரைப் பெருமளவுக்கு கவர்ந்திருந்தார்கள். சீர்திருத்தவாத காலத்தையும், பியூரிட்டன் காலத்தையும் அதிகம் படித்திருந்த ரைலின் சுவிசேஷப் பிரசங்கங்களனைத்தும் அக்கால சபைத்தலைவர்களுடைய போதனைகளின் அடையாளங்களைக் கொண்டு அவருடைய ஊழியத்தில் முக்கியமான இடத்தைக் கொண்டிருந்தன.

## திருமணமும் குடும்ப வாழ்க்கையும்

பணப்பிரச்சனைகளால் துன்பப்பட்டது மட்டுமன்றி ரைலின் முதலிரு மனைவிகளும் உடல்நலக்குறைவால் துன்பப்பட்டனர். தன்னுடைய 29ம் வயதில் அவர் மெட்டில்டா பிளம்டர் (Matilda Plumptre) என்ற பெண்ணை மனந்தார். ஒரு பெண் குழந்தையைப் பெற்றுக்கொடுத்துவிட்டு சில வருடங்களுக்குள் அவர் மரித்தார். அதன்பின் ரைலின் தாயும், சகோதரரும், சகோதரியும் மரித்தனர். யோபு தன் வாழ்நாளில் கர்த்தர் அனுமதித்திருந்த துன்பங்களை அனுபவித்ததுபோல் தானும் அத்தகைய துன்பங்களை அனுபவிப்பதாக வாழ்வதாக ரைல் உணர்ந்தார். தன்னுடைய 33ம் வயதில் தனது நீண்டகால நண்பியாக இருந்த ஜெசி வாக்கரை (Jessie Walker) ரைல் மணந்தார். அதற்குப்பிறகு மறுபடியும் அவருடைய வாழ்க்கையில் அன்பும், சந்தோஷமும் குடிபுகுந்தன. திருமணமாகி ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜெசி வாக்கரை குணமாகாத ஒரு நோய் பிடித்தது. அதிலிருந்து அவரால் இறுதிவரை மீள முடியவில்லை. ஜெசிக்கு நோய் பிடித்து பத்துவருடங்கள்வரை ரைல் அவரை மிகக் கவனமாகப் பார்த்து வளர்ந்துவரும் குடும்பத்தின் மத்தியிலும் சகல உதவிகளையும் செய்து வந்தார். ஜெசியின் மூலமாக ரைலுக்கு நான்கு குழந்தைகள் பிறந்திருந்தன. இத்தனை வீட்டுப் பொறுப்புகளுக்கு மத்தியிலும் அவர் போதகப் பணியையும் தொடர்ந்து செய்து வர வேண்டியிருந்தது.

இந்தக் காலப்பகுதியில் வேறு இடங்களில் பேசக் கூடிய வாய்ப்புகள் ரைலுக்கு வந்தன. இருந்தபோதும் தன் மனைவிமேலிருந்த அன்பால் கடுமையான பனிக்காலத்திலும் அவர் திறந்த வண்டியில் முப்பது மைல்கள் பிரயாணம் செய்து இரவு எங்கும் தங்காமல் வீட்டுக்கு வந்துவிடுவார். ரைலுக்கு 43 வயதாக இருக்கும்போது ஜெசி மரித்தார். இரண்டாவது தடவையாக தனிமையில் ரைல் மனைவியை இழந்து ஐந்து பிள்ளைகளை

*வளர்த்துவர வேண்டிய நிலை ஏற்பட்டது. அவருக்கு 45 வயதாக இருக்கும்போது ஸ்ட்ரெட்புரோக் (*Stradbroke*) என்ற இடத்துக்கு ரைல் மாற்றப்பட்டார். அங்கே அவர் ஹென்ரீட்டா குளோவ்ஸ்* (Henrietta Clowes) *என்பவரை சந்தித்து மூன்றாம் தடவையாக திருமண வாழ்க்கையைத் தொடங்கினார். ரைலின் மரித்த இரண்டு துணைவிகளைப் போலல்லாது ஹென்ரீட்டா நல்ல உடல் நலத்தைக் கொண்டிருந்தார். இந்த மணவாழ்க்கை நல்லபடியாக அமைந்து நீண்ட காலம் நிலைத் திருந்தது. ஹென்ரீட்டா இசைக் கருவிகளை வாசிப்பதில் திறமையானவ ராகவும், ஆழமான விசுவாசத்தைக் கொண்ட கிறிஸ்தவராகவும் இருந்தார்.*

### எழுத்துப்பணி

*வாழ்க்கையில் அனுபவித்த பல துன்பங்களுக்கு மத்தியிலும் எழுத்தாளராகவும், பிரசங்கியாகவும் ரைலின் பெயர் பிரபலமாகிக் கொண்டிருந்தது. ஆரம்பத்தில் சிறு பிரசுரங்களை வெளியிட்ட ரைல் பின்னால் நூல்களையும், வேத விளக்கவுரை நூல்களையும் எழுத ஆரம்பித்தார். உள்ளூரில் ஒரு பாலம் உடைந்து நூறு பேர் மரண மடைந்தபோது ரைல் தன்னுடைய முதல் துண்டுப்பிரசுரத்தை எழுதி வெளியிட்டார். மிகவும் எளிமையாகவும், தெளிவாகவும், தத்துவ ரீதியிலும் எழுதக்கூடிய திறமையைக் கர்த்தர் ரைலுக்கு வழங்கியிருந்தார். எத்தனையோ பேர் அவருடைய எழுத்து நடையைப் பின்பற்றி எழுத முயன்றும் அதில் வெற்றியடைய முடியவில்லை. தன்னுடைய எழுத்துப்பணி மூலம் பெற்ற பணத்தை ரைல் தன்னுடைய தந்தை கடன்பட்டிருந்தவர்களுக்கு கொடுத்துக் கடனைத்தீர்த்தார். திருச்சபை வரலாற்றை எழுதுவதில் ரைல் மிகத்திறமை வாய்ந்தவராக இருந்தார். தானே சம்பவங்களை நேரில் பார்த்தது போன்ற உணர்வோடும், மிகுந்த ஈடுபாட்டோடும் சபை வரலாற்றை அவர் எழுதினார்.*

### லிவர்பூலின் பிஷப்

*1880ல் ரைல் அறுபது வயதாக இருந்தபோது இங்கிலாந்தின் பிரதமர் அவரை எதிர்பாராத விதமாக லிவர்பூலின் பிசப்பாக நியமித்தார். ஒரு சில சுவிசேஷ இயக்கப் போதகர்கள் மட்டுமே இத்தகையப் பணிக்கு நியமிக்கப்பட்டிருந்தனர். ரைல் இந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டது அநேகரை ஆச்சரியப்பட வைத்தது. வயதாகியிருந்தபோதும் ரைல் லிவர்பூலில் இருபது வருடங்களுக்கு சுவிசேஷப்பணியை மிகுந்த ஊக்கத் தோடு செய்தார். 1900ல் ரைல் மரித்தபோது அவருக்குப் பின் பதவிக்கு வந்தவர். "குழந்தையின் இதயத்தைக் கொண்டிருந்த கிரெனைட் போன்ற மனிதர்" என்று ரைலை வர்ணித்தார். அந்த வார்த்தைகள் ரைலினுடைய குணத்தையும் ஊழியப்பணியையும் விளக்குவதாக இருந்தன.*

### ரைலின் முக்கியத்துவம்

*1. இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் திருச்சபைப் பிரிவு சுவிசேஷக் கோட்பாட்டைவிட்டு விலகிப் போய்க்கொண்டிருந்த காலப்பகுதியில் சீர்திருத்தவாதப் போதனைகளைத் தைரியமாக வெளிப்படையாகப்*

பிரசங்கித்தும், போதித்தும், எழுதியும் வந்திருந்தார் ரைல். ஆங்கிலிக்கன் திருச்சபையில் ஒற்றுமையை அவர் வலியுறுத்தினாலும் சத்தியத்தை விற்றுவிட்டு ஒற்றுமையைப் பாதுகாக்க அவர் தயாராக இருக்கவில்லை. விசுவாசத்தின் அடிப்படைப் போதனைகளைப் பின்பற்றுதல், ஒரே விசுவாச அறிக்கையைப் பின்பற்றுதல், ஒரே ஜெபநூலைப் பயன்படுத்துதல், வேதத்தில் அசையாத நம்பிக்கை வைத்திருத்தல் ஆகிய அம்சங்களின் அடிப்படையிலேயே சுவிசேஷக் கோட்பாட்டு போதகர்கள் இணைந்து செயல்பட வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார். ஆங்கிலிக்கன் திருச்சபையின் சீர்திருத்தத்திற்காக அவர் முயற்சியெடுத்தும் அவரது நோக்கங்களும், முயற்சிகளும் தோல்வியிலேயே போய் முடிந்தன. திருச்சபைப் பிரிவில் கட்டுப்பாடு இல்லாமலிருந்தது அவருக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்தியது. ஒரு மனிதன் எவ்வாறு இரட்சிப்பை அடையலாம்? என்ற கேள்விக்கு பலவிதமான பதில்கள் ஆங்கிலிக்கன் திருச்சபைப்பிரிவில் அன்று கொடுக்கப்பட்டன. சத்தியத்தைவிட்டு விலகிப்போயிருந்த அநேகர் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்றனர். 1885ல் ரைல், “நமது திருச்சபைப் பிரிவு கேட்பாரில்லாமல் அனைவரும் செயல்படும் ஒழுங்கற்ற நிலையில் சபைக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லாத நிலையில் இருக்கிறது” என்று எழுதினார். தான் இறப்பதற்கு நான்கு வருடங்களுக்கு முன் சபைக்கட்டுப்பாடு பற்றி ரைல் பின்வருமாறு எச்சரித்தார்: “சபைக்கட்டுப்பாடு என்பது வாழ்வா, மரணமா என்பதைப் போன்ற விஷயம். ஆங்கிலிக்கன் திருச்சபை தான் எதை விசுவாசிக்கிறது என்பதில் கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும், இல்லாவிட்டால் அது இல்லாமலேயே போய்விடவேண்டும்.”

இன்றைக்கு உலகெங்கும் ஆங்கிலிக்கன் திருச்சபை ரோமன் கத்தோலிக்க மதத்தோடு காதலுறவை ஏற்படுத்திக் களியாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஜோன் சார்ள்ஸ் ரைல் இன்று உயிரோடிருந்தால் அந்த திருச்சபைப்பிரிவில் தொடர்ந்திருந்திருக்கமாட்டார். கத்தோலிக்கத்தோடு உறவாடும் முயற்சியை அவர் ஒருபோதும் எடுத்திருக்க மாட்டார். ரோமன் கத்தோலிக்க மதத்தோடு இணைவதைப் பற்றிக் குறிப்பிட்ட ரைல், “அப்படிச்சேருவது நமது திருச்சபைக்கு ஏற்படுகின்ற மிகமோசமான ஆபத்தாக இருக்கும், அப்படியான ஆபத்தை சந்திப்பதைவிட நமது திருச்சபைப் பிரிவு அடியோடு நொறுக்கப்படுவது நல்லது” என்றார்.

2. ரைல் மறைந்துவிட்டாலும் அவருடைய எழுத்துக்களை இன்றும் ஆயிரக் கணக்கானவர்கள் உலகெங்கும் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருக் கிறார்கள். அவருடைய நூல்கள் பல பதிப்புகளாக வெளிவந்து கொண் டிருக்கின்றன. அவை தொடர்ந்து பல மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டு வருகின்றன. பிரசங்கம் எப்படி இருக்க வேண்டும் என்று ரைல் எழுதியிருக்கும் கட்டுரை தலை சிறந்தது. ரைல் எழுதிய பல நூல்கள் பிரபலமானவையாக இருக்கின்றன. மறைந்தாலும் தன்னுடைய எழுத்துக்களின் மூலம் ரைல் தொடர்ந்து பிரசங்கித்தும், போதித்தும் வருகிறார்.

# மலைப்பிரசங்கம்

## - விளக்கவுரை -

**ஜோன் சார்ள்ஸ் ரைல் வேதபூர்வமாக பிரசங்கமளிப்பதில் வல்லவராக இருந்ததுமட்டுமல்லாமல் எழுதுவதிலும் வல்லவராக இருந்தார். எளிமையான சொற்களைப் பயன்படுத்தி தெளிவாக சத்தியங்களை விளக்குவதில் அவர் தன்காலத்தில் நிகரற்றவராக இருந்தார். புதிய ஏற்பாட்டு சுவிசேஷ நூல்கள் நான்கிற்கும் அவர் விளக்கவுரை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் இருக்கும் அந்நூல்களால் பயனடைகிறவர்கள் அநேகர். மத்தேயு சுவிசேஷ நூலில் காணப்படும் கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்திற்கு ரைல் அளித்துள்ள விளக்கவுரையை இங்கே தமிழில் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம். இவை தமிழில் நூல்களாக மலரப்போகும் காலம் தொலைவிலில்லை. - ஆசிரியர்.**

**வேதப்பகுதி : மத்தேயு 5:1-12**
**தலைப்பு : மலைப்பிரசங்கம்**

*மத்தேயு சுவிசேஷத்தில் இவ்வசனங்களைக் கொண்டு ஆரம்பிக்கின்ற 3 அதிகாரங்களும் வேதத்தை வாசிக்கிற அனைவருக்கும் சிறப்பான போதனையை அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. இப்பகுதியில் அடங்கி யுள்ள போதனை மலைப்பிரசங்கம் என்று அழைக்கப்படுகின்றது.*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு வார்த்தையும் வளர்ந்து வருகின்ற கிறிஸ்தவர்களுக்கு மிகவும் ஆசீர்வாதமானதாகும். அவ்வார்த்தைகள் பிரதான மேய்ப்பனின் சத்தமாகவும்; சபைக்கு தலையானவருடையதும், பிரதான போதகருடையதுமான குரலாகவும்; எஜமானின் அதிகாரக் குரலாகவும் இருக்கிறது. அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் மனுஷர் பேசுகிற விதமாய் இருக்கவில்லை. அவராலேயே நாம் அனைவரும் நியாயத்தீர்ப்பு நாளிலே நியாயந்தீர்க்கப்படுவோம்.*

*கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட மனிதர்களாய் இருக்க வேண்டும் என்று அறிய வேண்டுமா? கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட குணாதிசயங்களைக் குறிக்கோளாகக்கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறீர்களா? கிறிஸ்துவின் சீஷனாயிருக்கிறவனின் வெளிப்படையான நடத்தையும் உள்ளான பழக்கமும் எப்படியிருக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறீர் களா? அப்படியானால், 'மலைப்பிரசங்கத்தை' நாம் அடிக்கடி படிக்க வேண்டும். அதன் ஒவ்வொரு வாக்கியத்தையும் நாம் அடிக்கடி கவனமாய் ஆராய்ந்து, அதன்படி நடந்து வரவேண்டும். பிரசங்கத்தின் துவக்கத்திலே சொல்லப்பட்டிருக்கிற 'பாக்கியவான்' என்று குறிப்பிடப்பட்டவர்களைக் குறித்து நாம் அடிக்கடி சிந்தித்துப் பார்ப்பது அவசியம். பிரதான ஆசாரியனால் ஆசீர்வதிக்கப்பட்ட யாவரும் பாக்கியவான்களே!*

*கர்த்தராகிய இயேசு "ஆவியில் எளிமையுள்ளவர்களை" பாக்கியவான் என்று அழைக்கிறார். அவர் தாழ்மையான, எளிய மனதுடைய மற்றும் சுயதாழ்ச்சியுடையவர்களைக் குறிப்பிடுகிறார்; கர்த்தருடைய பார்வையில் தங்களுடைய சொந்த பாவநிலையைக் குறித்ததான ஆழமான நம்பிக் கையைக் கொண்டவர்களை அவர் குறிக்கிறார்; மேலும் "அவர்களுடைய பார்வையில் அவர்கள் ஞானிகளோ, ஜாக்கிரதை உள்ளவர்களோ அல்ல". அவர்கள் "ஐசுவரிய சம்பத்துகளினால்" நிறைந்தவர்கள் அல்ல," தங்களுக்கு 'எதுவும் தேவையில்லை' என்று அவர்கள் அலப்புவதில்லை; அவர்கள் தங்களை "நிர்பாக்கியமுள்ளவர்களும், பரிதபிக்கப்படத்தக்கவர்களும், தரித்திரரும், குருடரும், நிர்வாணிகளுமாய்" கருதுகிறார்கள். அப்பேர்பட்ட வர்களையே பாக்கியவான்கள் என்கிறார் இயேசு. கிறிஸ்தவத்தின் முதல் எழுத்து "தாழ்மை" ஆகும். நாம் கீழானதிலே ஆரம்பித்தால், மேலானவற் றிலே கட்டப்படுவோம். (ஏசாயா 6:21; வெளிப்படுத்தல் 3:17).*

*துயரப்படுகிறவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். தங்களுடைய பாவங்களுக்காக வருந்தி, அனுதினமும் தங்களுடைய குற்றங்களுக்காக விசனப்படுகிறவர்களையே அவர் இங்கு குறிக்கிறார். இந்தப் பூமியில் வேறெதைக் காட்டிலும் தங்களுடைய பாவங்களைக் குறித்து அதிகமாய் விசனப்படுகிறவர்கள் இவர்களே; அதனுடைய நினைவே அவர்களுக்கு விசனத்தை அளிக்கிறது; அதனு டைய பாரம் அவர்களால் சகிக்கக்கூடாதது. இப்படிப்பட்டவர்கள் பாக்கியவான்கள்! "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவியும், நறுங்குண்ட இருதயமுமே." (சங்கீதம் 51:17). ஒரு நாள் அவர்களுடைய கண்ணீர் யாவும் துடைக்கப்பட்டு, "அவர்கள் ஆறுதல் அடைவார்கள்."*

*சாந்தகுணமுள்ளவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். திருப்தி உள்ள ஆவியை உடையவர்களையும், பொறுமை யானவர்களையுமே அவர் இப்படிக் குறிக்கிறார். அவர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் குறைவான மரியாதையை மனமுவந்து சகித்துக் கொள்கிறார்கள்; மனக்கசப்பின்றி தீங்கனுபவிப்பவர்களும்; எதிர்க்க விருப்பமற்றவர்களுமாயிருக்கிறார்கள். உவமையில் சொல்லப்பட்ட லாசரு வைப் போல, அவர்கள் நற்காரியங்களைப் பெறுவதற்கு காத்திருப்பதில் திருப்தி உள்ளவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பாக்கிய வான்கள்! காலச் சக்கரத்தில், அவர்கள் ஒருபோதும் இழந்து போனவர்கள் அல்ல. அவர்கள் ஒருநாள் "பூமியை அரசாளுவார்கள்." (வெளிப்படுத்தல் 5:10).*

*நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, கர்த்தருடைய சித்தத் திற்கு தங்களை முழுமையாக ஒப்புவிக்க விரும்புகிறவர்களையே அவர் குறிக்கிறார். அவர்கள் பரிசுத்தமாய் இருக்க வாஞ்சிப்பதைப் போல, பணக்காரனாகவோ, ஐசுவரியவானாகவோ அல்லது கல்விமானாகவோ இருக்க விரும்பவில்லை. இப்படிப்பட்ட யாவரும் பாக்கியவான்களே! அவர்கள் ஒருநாள் நிறைவானவர்களாய் இருப்பார்கள். "அவர்கள்*

விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவார்கள்." (சங்கீதம் 17:15).

இரக்கமுள்ளவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். பிறருக்காக வருந்துகிறவர்களை அவர் குறிக்கிறார். பாவத்தினாலோ அல்லது கவலையினாலோ துயரப்படுகிறவர்கள் மற்றவர்களுக்காக பரிதபிக்கிறவர்களாயும், அவர்களுடைய துயரங்களைக் குறைக்க அன்பினாலான விருப்பமுடையவர்களாயும், "நற்கிரியைகளைச்" செய்பவர்களாயும், நற்கிரியைகளைச் செய்ய முயற்சிப்பவர்களுமாயும் இருப்பார்கள். (அப்போஸ்தலர் 9:36). இப்பேர்ப்பட்ட யாவரும் பாக்கிய வான்களே! இந்த வாழ்க்கையிலும், இனி வரும் வாழ்க்கையிலும் அவர்கள் மிகுதியான பலனை அநுபவிப்பார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். வெளிப்புறமான சீர்திருத்தலையல்ல, உள்ளான பரிசுத்தத்தை நாடுகிறவர்களையே அவர் இவ்வாறு குறிக்கிறார். அவர்கள் வெளிப்புறமான சமய வழிபாட்டில் திருப்தியடையாமல், உள்ளான மனுஷனோடும் ஆவியோடும் கர்த்தரைத் தொழுதுகொள்ளவும், குற்றம் நீங்கிய மெய் மனச்சாட்சியை எப்பொழுதும் கொண்டிருக்கவே முயற்சி செய்வார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் யாவரும் பாக்கியவான்கள். "மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." (1 சாமுவேல் 16:7). ஆவியின் சிந்தை அதிகம் உள்ளவன் எவனோ, அவன் கர்த்தரோடு நிறைவான ஐக்கியம் கொள்வான்.

சமாதானம்பண்ணுகிறவர்களை "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக்கிறார். தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும், வீட்டிலும், நாட்டிலும், பூமியின் மீது சமாதானத்தையும், தருமக்காரியங்களையும் ஸ்தாபிக்க முயற்சிக்கிற யாவரையும் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார். "அன்பு நியாயப் பிரமாணத் தின் நிறைவேறுதலாய் இருக்கிறது" என்கிற சுவிசேஷ வாக்கினை போதிப் பதின் மூலம் எல்லா மனிதர்களையும் ஒருவருக்கொருவர் நேசிக்கும்படி செய்ய முயற்சிக்கிற யாவரையும் அவர் குறிக்கிறார் (ரோமர் 13:10). இப்படிப்பட்ட யாவரும் பாக்கியவான்களே! தேவகுமாரன் பூமிக்கு முதல்முறை வந்தபோது துவங்கியதும், இரண்டாம் முறை பூமிக்கு அவர் வரும்போது அதை நிறைவடையச் செய்யப்போகிறதுமான அதே மேலான பணியையே இவர்களும் செய்து வருகிறார்கள்.

நீதியினிமித்தம் "பாக்கியவான்" என்று கர்த்தராகிய இயேசு அழைக் கிறார். மெய் கிறிஸ்தவர்களாய் வாழ முயற்சி செய்ததினாலே அவர்கள் பரிகசிக்கப்பட்டு, கேலி செய்யப்பட்டு, நிந்திக்கப்பட்டு, துஷ்பிரயோகம் பண்ணப்பட்டார்கள். இப்படிப்பட்ட யாவரும் பாக்கியவான்களே! அவர் களுடைய எஜமான் பானம் பண்ணின அதே பாத்திரத்திலே அவர்களும் பானம் பண்ணுகிறார்கள். இப்பொழுது, அவரை இவர்கள் மனுஷர்களுக்கு முன்பாக அறிக்கை செய்கிறார்கள். கடைசி நாளில் அவர் இவர்களை தமது பிதாவுக்கும், தூதர்களுக்கும் முன்பாக அறிக்கை செய்வார். "அவர்களுடைய பலன் பெரிது."

*மலைப் பிரசங்கத்தின் ஆரம்பத்திலே இவ்வாறான எட்டு அடிக்கற்களை அதாவது மூலைக் கற்களை கர்த்தராகிய இயேசு நாட்டுகிறார். நமக்கு முன்பாக, எட்டு சிறப்பான சோதிக்கவல்ல சத்தியங்கள் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றையும் சரியான முறையில் அறிந்து, ஞானத்தை நாம் பெற்றுக்கொள்வோமாக.*

*இவ்வுலகத்தின் அடிப்படைக் கொள்கைகள் எப்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கொள்கைகளுக்கு முற்றிலுமாய் முரணாயிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அதை அலட்சியம் செய்வது வீண்; அவை இரண்டும் சரியான கனஅளவிலே ஒன்றுக்கொன்று எதிராயிருக்கின்றன. கர்த்தராகிய இயேசு போற்றுகின்ற குணாதிசயங்களை இந்த உலகம் இகழ்கிறது; அகந்தை, புத்தியின்மை, குரோதம், உலகப் பற்று, சுயநலம், சம்பிரதாயங்கள் மற்றும் அன்பின்மையால் நிரம்பியிருக்கிற இவ்வுலகை கர்த்தராகிய இயேசு கண்டிருக்கிறார்.*

*வளர்ந்துவருகிற கிறிஸ்தவர்களின் பழக்கத்திலிருந்து கிறிஸ்துவின் போதனை எவ்வளவு தூரம் மாறுபட்டு நிற்கிறது என்பதை நாம் உணர வேண்டும். ஆலயங்களுக்கும், சிற்றாலயங்களுக்கும், செல்லுகின்ற ஆண்கள் பெண்கள் மத்தியில், இன்றையதினம் நாம் இதுவரை வாசிக்கக்கேட்ட மாதிரியின்படி வாழ முயற்சிப்பவர்களை நாம் எங்கே காண்கிறோம்? ஞானஸ்நானம் பெற்ற அநேக ஜனங்கள் புதிய ஏற்பாடு என்ன சொல்லுகிறது என்பதை அறியாது உணர்வில்லாதவர்களாய் இருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லா விசுவாசிகளும் எப்படிப் பரிசுத்தமாயும், ஆவியின் சிந்தையை உடையவர்களாயும் இருக்க வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மலைப் பிரசங்கத்தின் தகுதிக்குக் கீழான எந்தவொரு தகுதியையும் அவர்கள் ஒருபோதும் தங்களுடைய வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொள்ளக்கூடாது. கிறிஸ்தவம் என்பது விசேஷமான நடைமுறை ஒழுக்கமாகும்: அது ஆழமான கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், பரிசுத்த வாழ்வே எப்போதும் அதன் கனிகளாக இருக்க வேண்டும்; இயேசு அழைத்த "பாக்கியவான்கள்" யாரென்பதை நாம் அடிக்கடி சிந்தித்துக்கொண்டால், பரிசுத்த வாழ்வு என்றால் என்ன? என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம்.*

### வேதப்பகுதி: மத்தேயு 5:13-20

### தலைப்பு: மெய் கிறிஸ்தவர்களின் குணாதிசயங்கள், மற்றும் கிறிஸ்துவின் போதனைக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையிலான தொடர்பு

*முதலாவதாக, மெய்க் கிறிஸ்தவர்கள் கடைப்பிடித்து இவ்வுலகில் பின்பற்றக்கூடிய குணங்களை இந்த வசனங்கள் நமக்கு கற்றுக் கொடுக்கின்றன.*

*மெய்க் கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் "உப்பைப்" போல இருக்க*

வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு நமக்குக் கூறுகிறார். "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்." மற்றெந்த பொருளைக் காட்டிலும், உப்பானது தன்னில் தானே தனிச்சுவை உடையது. பிறபொருட்களுடன் அது கலக்கும் போது, கெட்டுப்போவதில் இருந்து அவைகளைப் பாதுகாக்கிறது; தன்னோடு கலக்கின்ற எல்லாவற்றோடும் தன்னுடைய சுவையின் ஒரு பகுதியை பகிர்ந்தளிக்கிறது. தன்னுடைய சாரத்தை அது இழக்காதவரை பிற பொருட்களைப் பாதுகாக்கிறது.

நாம் மெய்க் கிறிஸ்தவர்களா? அப்படியானால், நாம் நம்முடைய பணியையும், கடமைகளையும் இனிக் கவனிப்போம்!

மெய்க் கிறிஸ்தவர்கள் இவ்வுலகிற்கு வெளிச்சத்தை போல் இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு நமக்கு கூறுகிறார். "நீங்கள் உலகிற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள்." இருளிலிருந்து முழுமையாக வேறுபட்டு இருக்க வேண்டியது வெளிச்சத்தின் தன்மையாகும். ஓர் இருட்டறையில் உள்ள மிகச்சிறிய நெருப்புப் பொறிகூட உடனே தென்பட்டுவிடும். படைக்கப்பட்ட எல்லாப் படைப்பிலும், சிருஷ்டியிலும், வெளிச்சமே மிகப் பயனுள்ளது, பொலிவிக்கிறது; அது வழிநடத்துகிறது; அது உற்சாகமளிக்கிறது. இதுவே முதலில் உண்டாக்கப்பட்டது (ஆதியாகமம் 1:3). இது இல்லாவிடில், உலகமானது இருண்ட சூன்யமாய் இருந்திருக்கும். நாம் மெய்க் கிறிஸ்தவர்களா? அப்படியாயின், நம்முடைய நிலையையும், கடமைப் பொறுப்பையும் உணர்ந்தவர்களாய் நாம் செயல்பட வேண்டும்.

நாம் மெய்க் கிறிஸ்தவர்களாய் இருப்பின், நம்முடைய குணாதிசயம் வித்தியாசமானதாகவும், சிறப்பானதாகவும் இருக்க வேண்டும் என்று இவ்விரண்டு உருவகங்களும் நமக்குக் கற்றுத்தருகின்றன. நாம் கிறிஸ்துவினால் அவருடைய பிள்ளைகளாக மாற்றப்பட்டிருந்தால், மற்றவர்களைப் போல நாம் சிந்திக்காமலும், வாழாமலும், வாழ்க்கை முழுவதையும் வீணாக்காமலும் இருக்க இவை உதவும். நாம் கிருபையைப் பெற்றிருக்கிறோமா? அப்படியானால், அது நம்மில் வெளிப்படவேண்டும். நாம் ஆவியை உடையவர்களா? அப்படியிருப்பின், நம்மில் அதன் கனிகள் இருக்க வேண்டும். நாம் மீட்பை அடைந்திருக்கிறோமா? அப்படியாயின், உலக சிந்தனையுடையவர்களுக்கும் நமக்கும் இடையே பழக்க வழக்கங்களிலும், விருப்பங்களிலும், சிந்தனையிலும் வித்தியாசம் காணப்பட வேண்டும். இதிலிருந்து கிறிஸ்தவம் என்பது வெறுமனே ஞானஸ்நானம் பெற்று திருச்சபைக்குப் போவதைவிட மேலானது என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. விசுவாசத்தைக் கொண்டிருத்தல், பரிசுத்த வாழ்க்கையில் பயிற்சி எடுத்தல் ஆகிய சிறப்பம்சங்களை "உப்பு" மற்றும் "வெளிச்சம்" ஆகிய வார்த்தைகள் நமக்கு உணர்த்துகின்றன. நாம் மீட்கப் பட்டிருப்போமானால், இவ்வுலகத்தானைப் போலில்லாமல், தனி மனிதனாய் துணிவுடன் செயல்பட வேண்டும்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் போதனைக்கும் பழைய ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பை இவ்வசனங்கள் நமக்கு போதிக்கின்றன.

*இன்று வழக்கத்திலிருக்கிற தவறுகளை பற்றியதான மிக முக்கியமான பகுதி இது. இதனை ஒரு விசேஷமான வாக்கியத்தின் மூலம் நமது ஆண்டவர் தெளிவுப்படுத்துகிறார்: "நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" என்று அவர் கூறுகிறார். இவை குறிப்பிடத்தக்க வார்த்தைகளாகும். யூதர்களின் இயல்பான வியாகுலத்தை திருப்திப்படுத்தும் வகையில் இவை உச்சரிக்கப்பட்டபோது ஆழமான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. இவ்வுலகம் இருக்கும்வரை இவ்வார்த்தைகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. ஏனெனில், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் சமயங்கள் ஒன்றே என்று இக்கூற்று சாட்சி அளிக்கிறது.*

*ஒரு நாள் இரட்சகர் ஒருவர் தோன்றுவார் என்று தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட வாக்கியங்களை நிறைவேற்றும்படி கர்த்தராகிய இயேசு இவ்வுலகிற்கு வந்தார். மோசேயின் எல்லாப் பலிகளிலும் குறிப் பிடப்பட்ட பாவத்திற்கான சிறந்த பரிகாரபலியாக கர்த்தராகிய இயேசு சம்பிரதாயங்களின் கட்டளைகளை நிறைவேற்றும்படி வந்தார். நாம் ஒருபோதும் கீழ்ப்படியமுடியாத ஒழுக்கச் சட்டத்திற்கு தன்னை முற்றிலுமாக கீழ்ப்படுத்தி பூரணமாகக் கீழ்ப்படிந்தவராய் அதை நிறைவேற்றும்படி வந்தார். நமக்கும் பிதாவுக்கும் இடையே ஏற்பட்ட பிளவிற்கான கிரயத்தை நாம் ஒருபோதும் செலுத்தமுடியாதிருக்க, தம்முடைய பரிகார இரத்தத்தினாலே நம்முடைய கிரயத்தை அவர் செலுத்தினார். இவ்வனைத்து முறைகளிலும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தை அவர் மேன்மைப்படுத்தி, அதனுடைய முக்கியத்துவத்தை முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிக தெளிவாக்கினார். "அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்." (ஏசாயா 42:21).*

*"நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகளைக்" பற்றியதான நமது ஆண்டவரின் வார்த்தைகளில் இருந்து ஆழமான ஞானப்பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். அவற்றை நன்கு ஆராய்ந்து, அவைகளை நமது இருதயங்களிலே வைத்துக் கொள்ளக்கடவோம்.*

*முதலாவது, எங்காவது போலித்தனத்திற்கு இடமளித்து, பழைய ஏற்பாட்டை இகழ்வதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். வழக்கத்திலில்லாத, பழமையானதும், பிரயோஜனமற்றதுமான இந்த வேதப்புத்தகத்தை தூக்கி எறிந்துவிடுங்கள் என்று நம்மை ஏவுகிற மக்களுக்கு நாம் ஒருபோதும் செவிகொடுக்கக்கூடாது. பழைய ஏற்பாட்டின் சமயமே கிறிஸ்தவத்தின் வித்தாயிருக்கிறது. பழைய ஏற்பாடு சுவிசேஷத்தின் மொட்டாயும், புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் மலர்ந்த மலராயும் இருக்கிறது. பழைய ஏற்பாடு சுவிசேஷத்தின் குறுத்தெலும்பாயும், புதிய ஏற்பாடு சுவிசேஷத்தின் முழுச் செவியாயும் இருக்கிறது. நிழலாட்டமாய் கண்ணாடியின் ஊடாக அநேக காரியங்களை பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் கண்டிருந்தபோதிலும், அவர்களனைவரும் அதே இரட்சகரை விசுவாசித்தும், நம்மைப் போலவே அதே ஆவியினாலே வழிநடத்தப்*

*பட்டும் வந்தார்கள். இவைகள் சாதாரண காரியங்கள் அல்லவே, பழைய ஏற்பாட்டின் மீதான அறிவீனமான அலட்சியம் விசுவாசமின்மையையே ஏற்படுத்தும்.*

*இரண்டாவது, நியாயப்பிரமாணத்தின் பத்து கட்டளைகளை இகழ் வாகக் கருதுவதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சுவிசேஷத்தினால் இது ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதென்றோ அல்லது கிறிஸ்தவர்கள் இதில் கற்றுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை என்றோ நாம் ஒரு கணம்கூட நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் வருகையானது பத்து கட்டளைகளின் நிலையை ஒரு மயிரளவுகூட மாற்றவில்லை. அப்படி யானால், அது உயர்த்தப்பட்டு அதனுடைய அதிகாரம் நிலைநிறுத்தப் பட்டிருக்கும் (ரோமர் 3:31). நியாயப்பிரமாணத்தின் பத்துகட்டளைகள் சரியானது எது, தவறு எது என்று விளக்கிக் காட்டுகின்ற கர்த்தரின் நித்திய அளவுகோலாய் இருக்கிறது. இதனால், பாவத்தைக் குறித்ததான அறிவையும்; கிறிஸ்துவின் தேவையின் அவசியத்தை ஆவியினாலே மனுஷர்களுக்கு வெளிப்படுத்தி, அவரிடம் அவர்களை வழிநடத்தவும்; தம்முடைய ஜனங்களின் பரிசுத்த வாழ்விற்கும், அவைகளின் ஆளுமையும், வழிநடத்துதலும் அவசியம் என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார். நியாயப் பிரமாணமானது “மகிமையுள்ள சுவிசேஷத்திற்கு” ஒப்பாய் இருக்கிறது. அது நம்மை மீட்காது, அதனால் நாம் நியாயந்தீர்க்கப்படோம். ஆனால், ஒருபோதும் நாம் அதை இகழ்வாகக் கருதக்கூடாது. நியாயப் பிரமாணமானது குறைவாக மதிப்பிடப்பட்டால், அது அறிவீனமான ஊழியத்தின் அடையாளமாகவும், ஆரோக்கியமற்ற சமய நிலைப் பாட்டைக் குறிப்பதாயும் இருக்கும். மெய்க் கிறிஸ்தவன் “தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாய் இருக்கிறான்.” (ரோமர் 7:22).*

*கடைசியாக, சுவிசேஷமானது, தனிப்பட்ட பரிசுத்த வாழ்வின் தரத்தைக் குறைப்பதாயும் மற்றும் யூதனைப் போன்று கிறிஸ்தவனும் தன்னுடைய அனுதின வாழ்வில் கட்டுப்பாட்டுடன் செயல்படவேண்டும் என்ற எண்ணம் இல்லாததாயும் இருக்கிறது என்ற கருத்தைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்கக்கடவோம். இது நம்மிடையே பொதுவாகக் காணப்படுகின்ற மிகப்பெரிய தவறாகும். காரியம் இப்படியாய் இருக்கும் பட்சத்தில், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான் நீதிமானாக்கப்படும்படிக்கு பழைய ஏற்பாட்டை தனது வழிகாட்டியாகக் கொள்ளாமல் வேறொன்றி னாலும் பயனடையான். நாம் அதிக வெளிச்சம் கொண்டிருந்தால், நாம் அதிகமாய் கடவுளை நேசிக்க வேண்டும்; நாம் கிறிஸ்துவுக்குள் நம்முடைய முழுமையான பூரணமான மன்னிப்பைத் தெளிவாகக் கண்டால், நாம் அவருடைய மகிமைக்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து உழைக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் செய்ததைக் காட்டிலும் நம்மை மீட்க கிறிஸ்து செய்த விலைக்கிரயம் மிகச் சிறந்தது என்பதை நாம் அறிவோம். கெத்செமனே மற்றும் கல்வாரியில் என்ன நடந்தது என்பதை நாம் வாசித்திருக்கிறோம். மேலும், இன்னொன்று வரக் காத்திருப்பதுபோல அவர்கள் அதைத் தெளிவற்ற மங்கலான நிலையில் கண்டார்கள். நாம்*

*ஒருபோதும் நம்முடைய கடமைப்பொறுப்பை மறந்துவிடக்கூடாது. தனிப்பட்ட பரிசுத்தவாழ்வின் குறைந்த தரத்திலே திருப்தியுள்ளவனாய் காணப்படும் கிறிஸ்தவன் கற்றுக்கொள்ள வேண்டிய அநேகக் காரியங்கள் இங்கே உண்டு.*

**வேதப்பகுதி: மத்தேயு 5:21–37**

**தலைப்பு: நியாயப்பிரமாணத்தின் ஆத்மீக இயல்பு மூன்று உதாரணங்களினால் மெய்ப்பிக்கப்படுகிறது.**

*வேதாகமத்தின் அனைத்து வாசகர்களின் நெருங்கிய கவனத்தை இவ்வசனங்கள் ஈர்க்கின்றன. வேதத்தில் உள்ள கொள்கைகளைப் சரியாகப் புரிந்துகொள்ளுதல் கிறிஸ்தவத்தின் வேராயிருக்கிறது. "நான் நியாயப் பிரமாணத்தை அழிக்க வரவில்லை, நிறைவேற்றவே வந்தேன்" என்கிற தம்முடைய வார்த்தைகளை கர்த்தராகிய இயேசு முழுமையாக விளக்கு கிறார். அவருடைய சுவிசேஷமானது நியாயப்பிரமாணத்தை மிகைப் படுத்தியும், அதினுடைய அதிகாரத்தை உயர்த்தியும் காட்டுகிறது என்று அவர் நமக்குப் போதிக்கிறார். அவரால் விளக்கமளிக்கப்பட்ட நியாயப்பிரமாணமானது யூதர்கள் எண்ணியதற்கும் மேலான ஆத்மீக மற்றும் இருதயத்தேடலின் விதியாகும் (அது இருதயத்தை ஆராய்ந்துப் பார்க்கின்ற விதியாய் இருக்கிறது). பத்துக் கட்டளைகளிலிருந்து மூன்று கட்டளைகளை உதாரணங்களாக தெரிவுசெய்ததன் மூலம் தமது கருத்தை அவர் மெய்ப்பித்தார்.*

*ஆறாவது கட்டளையை அவர் விளக்கித் தெளிவுபடுத்துகிறார். ஒருவரைக் கொலை செய்யாதவரை கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை நாம் சரியாகத்தான் பின்பற்றுகிறோம் என்று அன்று அநேகர் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இதைக் காட்டிலும் அதனுடைய கோரிக்கைகள் ஆழமானது என்று கர்த்தராகிய இயேசு காண்பிக்கிறார். எல்லாவிதமான கோபம் மற்றும் உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகளைக் காரணமின்றிப் பயன்படுத்துவதை இந்தக் கட்டளை கடிந்துகொள்கிறது என்பதை மனதில் குறித்துக்கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களுக்கு சொந்தமானதை எடுப்பதில் முற்றிலுமாக குற்றம் அற்றவர்களாய் இருப்பினும், நாம் ஆறாம் கட்டளையை உடைப்போமானால் குற்றத்திற்குள்ளாவோம்.*

*ஏழாவது கட்டளையை அவர் விளக்குகிறார். நம்முடைய நடைமுறை வாழ்வில் விபச்சாரம் செய்யாதவரை அநேர் கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தின் இந்தப்பகுதியைக் கைக்கொள்வதாகக் கருதுகிறார்கள். நம்முடைய வெளிப்புறமான நடத்தை ஒழுக்கமாயும், சரியாயும் இருந்தாலுங்கூட நம்முடைய சிந்தனைகளினாலும், இருதயங்களினாலும் மற்றும் கற்பனைகளினாலும் இந்தக் கட்டளையை நம்மால் மீற இயலும் என்று கர்த்தராகிய இயேசு போதிக்கிறார். நம்முடைய கர்த்தரின் செயல்களுக்கு அப்பாற்பட்ட பார்வைக்கூட பாவம் விளைவிப்பதே. இச்சையான கடைக்கண் பார்வைகூட பாவமாகும்.*

*அவர் மூன்றாம் கட்டளையைப் பின்வருமாறு விளக்குகிறார். சத்தியப் பிரமாணங்களை நிறைவேற்றியும் பொய்யாணை இடாமலும் இருக்கும் வரை அநேகர் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் இந்த பகுதியைக் கைக்கொள்வதாக கற்பனை செய்கிறார்கள். வீணான மற்றும் அற்பமான ஆணைகளெல்லாவற்றையும் கர்த்தராகிய இயேசு விலக்குகிறார் (தடை செய்கிறார்). கர்த்தருடைய நாமத்தை பயன்படுத்தாதபோதும், அவருடைய படைப்பின் பெயரால் ஆணையிட்டாலோ அல்லது மிகச் சிறப்பான தருணங்களைத் தவிர மற்ற சூழலில் கர்த்தருடைய பெயரை சாட்சியாக வைத்து ஆணை இடுவது மிகப்பெரிய பாவமாகும் என்கிறார்.*

*இவை அனைத்தும் நமக்கு நல்ல படிப்பினை அளிக்கின்றன. இவை மிகச் சிறப்பான பிரதிபலிப்புகளை நம் மனதில் எழுப்ப வேண்டும்: நம் இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும்படி இப்போதனை அழைக்கிறது. மேலும், இவை நமக்கு போதிப்பதென்ன? கர்த்தருடைய அளவுக்கடந்த பரிசுத்தத்தை இது நமக்கு போதிக்கின்றது. மனித கண்கள் காணாத குறைகளையும், குற்றங்களையும் காண்கிறவரும், மகா பரிசுத்தரும், பூரண சற்குணராயும் அவர் இருக்கிறார். நம்முடைய உள்நோக்கங்களை அவர் அறிவார்; அவர் நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் செயல்களைக் கவனிக்கிறார்: அவர் “உள்ளத்தில் உண்மை இருக்க விரும்புகிறார்” (சங்கீதம் 51:6). கர்த்தருடைய குணாதிசயத்தின் இப்பகுதியை அதிகமாய் அறிந்து கொள்வது நமக்கு நலமாய் இருக்கும். மனிதர்கள் கர்த்தரை “இருக்கிறவராக”க் கண்டுகொண்டால் பெருமை, சுயநீதி மற்றும் கவனமின்மைக்கு அங்கு இடமிருக்காது (1 யோவான் 3:2).*

*ஆத்மீகக் காரியங்களில் மனிதனுக்கு இருக்கும் அதிகப்படியான அறியாமையை இப்பகுதி நமக்குப் போதிக்கிறது. அறிவற்ற யூதர்களைப் பார்க்கிலும், கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் குறிக்கோள்களை அறியாத பயபக்திக்குரிய ஆயிரமாயிரம் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் பத்துக் கட்டளைகளை நன்கு அறிவார்கள்; “இவைகளை யெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்” என்று கூறிய ஐசுவரிய வாலிபனைப் போல அவர்களும் கற்பனைசெய்கிறார்கள் (மத்தேயு 16:20); வெளிப்புறமான செயல்களினாலும் கிரியைகளினாலுமே அல்லாமல் வேறொன்றினாலும் ஆறாவது ஏழாவது கட்டளைகளை உடைக்க (மீற) வாய்ப்பில்லை என்று அவர்கள் எண்ணினார்கள். எனவே, அவர்கள் சிறிய மதக்காரியங்களைக் கைக்கொள்ளுவதில் பூரண திருப்தியுள்ளவர்களாயும், தங்களில் தாங்களே திருப்தியுள்ள வாழ்க்கையையும் வாழ்ந்தார்கள். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை மெய்யாய் அறிந்துகொண்ட யாவரும் பாக்கியவான்களே!*

*நம்மை மீட்க கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பாவபரிகார இரத்தம் நமக்கு அதிகப்படியான தேவை என்பதை இப்பகுதி நமக்குப் போதிக்கிறது. இவ்வுலகத்திலுள்ள எந்த மனிதனாவது, மனுஷியாவது இப்பேர்பட்ட கடவுளுக்கு முன்பாக நின்று “நான் குற்றமற்றவன்” என்று கூற முடியுமா? தன் விருப்பப்படியே வளர்ந்து, கர்த்தருடைய கட்டளைகளை ஆயிரத்தில்*

*ஒருமுறை கூட மீறாத ஒருவன் உண்டோ? "அந்தப்படியே நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10). வல்லமையுள்ள மத்தியஸ்தர் நமக்கிராவிட்டால் நாம் ஒவ்வொருவரும் நியாயத்தீர்ப்பு நாளான்று தண்டிக்கப்பட்டிருப்போம். நியாயப்பிரமாணத்தின் உண்மையான அர்த்தத்தைக் குறித்ததான அறியாமையே இன்று அநேகர் சுவிசேஷத்தை மதிக்காமலும், கிறிஸ்தவத்தின்மீது சுயதிருப்தி உள்ளவர்களாயும் இருப்பதற்குக் காரணம். கர்த்தருடைய பத்துக் கட்டளைகளில் உள்ள பரிசுத்தத்தையும், கண்டிப்பையும் அவர்கள் பார்க்கவில்லை அப்படி பார்த்திருந்தால், அவர்கள் கிறிஸ்துவுக்குள் மீட்கப்படும்வரை அவர்களால் ஓய்ந்திருக்க முடியாது.*

*இறுதியாக, எல்லா பாவத் தருணங்களையும் தவிர்ப்பதின் எல்லையற்ற முக்கியத்துவத்தை இப்பகுதி நமக்குப் போதிக்கிறது. நாம் உண்மையாகவே பரிசுத்தராய் இருக்க விரும்பினால், நாம் "நம்முடைய நாவுகளினால் பாவஞ்செய்யாதபடிக்கு, நம்முடைய வழிகளைக் காத்து நடக்க வேண்டும்." (சங்கீதம் 39:1). நாம் சண்டைகளையும், அபிப்பிராய பேதங்களையும் அநுசரித்து நடக்க வேண்டும். இல்லையெனில் அவை மிகப்பெரிய விபரீதங்களுக்கு நம்மை வழிநடத்தும். "சண்டையின் ஆரம்பம் மதகைத் திறந்துவிடுகிறது போலிருக்கும்" (நீதிமொழிகள் 17:14). நம்முடைய சரீரத்தை சிலுவையிலறையவும், சரீர அங்கங்களை நிக்கிரகம் செய்யவும் நாம் உழைக்க வேண்டும். மேலும் நாம் பாவஞ்செய்வதைக் காட்டிலும் எந்த விதமான பலியையோ அல்லது சரீர அசௌகரியங்களையோ ஏற்றுக் கொள்ளலாம்: நம்முடைய உதடுகளை கடிவாளமிட்டு காத்துக்கொண்டு, நம்முடைய வாத்தைகள் மீது அதிக கவனமாய் இருக்க வேண்டும். நாம் இப்படி செய்வதினால், மனிதர்கள் நம்மை "துல்லியமானவர்கள்" என்று அழைப்பார்கள்; அல்லது, அவர்கள் விரும்பினால், நம்மை "அதிக கண்டிப்பானவர்கள்" என்றும் அழைப்பர். நாம் அசைக்கப்பட வேண்டிய தில்லை. நாம் நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு கூறியதையே செய்கிறோம், எனினும், இப்படி நடப்பதைக்குறித்து நாம் வெட்கப்பட வேண்டியதில்லை.*

**வேதப்பகுதி : மத்தேயு 5:38-48**

**தலைப்பு : கிறிஸ்தவ அன்பின் கட்டளையின் மாதிரி**

*ஒருவர் மற்றொருவரோடு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற நடத்தைக்கான, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விதிகள் இப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவன் தன் சக மனிதர்களை அறிந்து செயல்பட வேண்டும் என்று விரும்பினால், அவன் இவ்வசனங் களை அடிக்கடி தியானிக்க வேண்டும். இவைகள் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியவை: கிறிஸ்தவத்தின் எதிரிகள் கூட இவற்றைப் பாராட்டி இருக்கின்றனர். இவை என்ன சொல்லுகின்றன என்பதை நாம் அறிந்துகொள்வது அவசியம். மன்னிக்க முடியாத, பழிவாங்கும் மனமுள்ள ஆவியைபோன்ற எல்லாவற்றையும் கர்த்தராகிய*

*இயேசு புறக்கணிக்கிறார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்." தீங்கிற்கு சினங்கொள்ளுகிற விருப்பம், பொல்லாங்கு செய்ய விரைந்து செல்லுதல், சண்டை பிடிக்கிறதும் சச்சரவு செய்கிறதுமான மனநிலை, நம்முடைய உரிமைகளை உறுதிசெய்வதிலுள்ள ஆர்வம் இவை அனைத்தும் கிறிஸ்துவின் சிந்தைக்கு முரணானது. இப்படிப் பட்ட மனநிலைகளில் இவ்வுலகம் ஒரு தீங்கையும் காணாது; ஆனாலும், அவைகள் கிறிஸ்தவனின் குணங்களாகாது. நம்முடைய எஜமான் கூறுகிறார், "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்."*

*பரந்த அன்பு மற்றும் ஈகை மனத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு நமக்குக் கட்டளையிடுகிறார். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்." நாம் எல்லா விரோதங்களையும் விட்டுவிட வேண்டும்; நாம் தீமைக்கு நன்மை செய்யவும், சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டும். அதுவுமல்லாமல், நாம் வார்த்தையில் மட்டும் அன்பாயிராமல், செயலில் அன்புள்ளவர் களாய் இருக்க வேண்டும்; நம்மை நாமே வெறுத்து, இரக்கமும், நற் பண்புமுடையவர்களாய் இருக்க வேண்டுமாயின், சோதனைகளை சகிக்கக் கடவோம்: "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வர பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ." நாம் மற்றொரு வனைக் காயப்படுத்தி, தீங்கு விளைவிக்காமல் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றிலும் நாம் சுயநலமற்றவர்களாய் இருக்க வேண்டும். மற்றவர்கள் என்னிடம் எப்படி நடந்து கொள்வார்கள்? என்ற சிந்தை நமக்கிராமல், கிறிஸ்து நான் என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறார்? என்ற சிந்தையே நம்மில் இருக்கக்கடவது.*

*முதல் பார்வையில், இப்படிப்பட்ட நடத்தையின் நிலையானது மிக உன்னதமான நிலையில் காணப்படும். ஆனால் நாம் ஒருபோதும் கீழான ஒன்றை குறிக்கோளாக வைப்பதில் திருப்தி அடையக்கூடாது. இப்பகுதியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும்படி நமது ஆண்டவர் தந்துள்ள இரண்டு மகத்தான வாதங்களை நாம் கவனிப்போம். அவை ஆழமானதும், கவனத்தை ஈர்க்கக் கூடியதுமானவை.*

*முதலாவது, இங்கே பரிந்துரைசெய்யப்பட்ட ஆவியையும், குணங்களை யும் பெற முயற்சி செய்யாவிட்டால், நாம் இன்னும் தேவனுடைய பிள்ளை கள் அல்ல. "பரலோகத்திலிருக்கிற நம் பிதா" என்ன செய்கிறார்? அவர் எல்லார்மேலும் இரக்கமுள்ளவராய் இருக்கிறார்: அவர் நல்லோர் மீதும் தீயோர்மீதும் மழையை வருவிக்கப்பண்ணுகிறார்; அவர் "தமது சூரியனை" பாகுபாடின்றி அனைவர்மேலும் உதிக்கச் செய்கிறார். குழந்தை யும் தன் தகப்பனைப் போன்றே இருக்க வேண்டும்: நாம் ஒருவரிடமும் இரக்கமும், கருணையும் காண்பிக்காத பட்சத்தில் நம்முடைய பரலோக பிதாவுக்கும் நமக்குமான ஒற்றுமை எங்கே இருக்கிறது? நாம் அன்பில் குறைவுள்ளவராய் இருந்தால், நாம் புது சிருஷ்டிகளாய் இருக்கிறோம் என்பதற்கான ஆதாரம் தான் எங்கே? இவை அனைத்தும் தேவையாய் இருக்கிறது. நாம் "மறுபடியும் பிறக்க வேண்டியது" அவசியம் (யோவான் 3:7).*

இரண்டாவதாக, இப்பகுதி இங்கே பரிந்துரைசெய்யப்பட்ட ஆவியையும், குணங்களையும் பெற முயற்சி செய்யாவிட்டால், நாம் இன்னமும் உலகத்தான் என்று வெளிப்படுத்துகிறது. “மற்றவர்களைக் காட்டிலும் நீ எப்படி விசேஷித்தவன்? என்பதே நமது ஆண்டவரின் பரிவான கேள்வி. மதமற்ற நாஸ்திகர்களால் கூட “தன்னை நேசிப்பவர்களை நேசிக்க முடியும்.” பாசமும் விருப்பமும் அவர்களை அசைக்கும்போது, அவர்களால் இரக்கங்காட்டி நன்மை செய்ய முடியும். ஆனால், ஒரு கிறிஸ்தவன் இவைகளைப் பார்க்கிலும் மேலான கொள்கைகளினால் ஆட்கொள்ளப் பட வேண்டும். நாம் இந்தச் சோதனையினின்று பின்வாங்குகிறோமா? நமது எதிராளிகளுக்கு நன்மை செய்வது நமக்கு இயலாத காரியமாய்த் தோன்றுகிறதா? காரியம் இப்படியாய் இருக்குமாயின், நாம் இன்னும் மனமாற்றமடைய வேண்டியது நிச்சயம் என்று அறிவோமாக. நாம் இன்னும் “தேவனுடைய ஆவியைப் பெறவில்லை” (1 கொரிந்தியர் 2:12).

இவை அனைத்தும் நம்மை மனமாற்றப் பிரதிபலிப்புகளுக்கு அழைக் கின்றன. வேதத்தின் பகுதிகளே நம்மில் தாழ்மையான எண்ணங்கள் உருவாகும்படி அமைந்துள்ளன. ஒரு கிறிஸ்தவன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான அருமையான விளக்கப்படம் நமக்கு இங்கே கொடுக்கப்பட் டுள்ளது. வேதனையான உணர்ச்சிகளின்றி அவற்றை நாம் காணமுடியாது: ஒரு கிறிஸ்தவன் இப்போது இருக்கின்ற நிலையில் இருந்து முற்றிலுமாய் மாறுபட்டவன் என்பதை நாம் அறிய வேண்டும். இரண்டு பொதுவான பாடங்களை நாம் இதிலிருந்து கற்றுக்கொள்வோம்.

முதலாவது, மெய்கிறிஸ்தவர்களால் இந்த பத்து வசனங்களில் உள்ள ஆவியைத் தொடர்ச்சியாக நினைவுகூற முயன்றால், அவர்கள் இப்போது செய்வதைவிட பலமடங்கு கிறிஸ்தவத்தை உலகம் அறியச் செய்வார்கள். இப்பகுதியில் உள்ள குறைந்தபட்ச வார்த்தைகள் அற்பமானதும் மேலான மதிப்பற்றதுமாய் இருக்கின்றன என்ற கருத்து நம்மில் தோன்ற நாம் அனுமதிக்கக் கூடாது. அவைகள் அப்படிப்பட்டவைகள் அல்ல.

இப்பகுதியில் சொல்லப்பட்டுள்ள ஆவிக்கான கவனமே நம் மதத்தை அழகுள்ளதாய் மாற்றுகிறது: இதில் அடங்கியுள்ள காரியங்களை உதாசீனப்படுத்தும்போதே நம் மதம் உருக்குலைகிறது. தவறாத உபசரணை, அன்பு, இரக்கம், பிறரிடம் காட்டும் பரிவு ஆகியவை கர்த்தருடைய பிள்ளைகள் கொண்டிருக்கக்கூடிய மேலான ஆபரணங்களில் சிலவாகும். உலகமானது இக்கொள்கைகளைப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும் இவைகளைப் புரிந்துகொள்ளும். முரட்டாட்டமான, கொடூரமான, கபடான மற்றும் அநாகரீகமான மதம் ஒன்றும் இங்கு இல்லை. பரிசுத்தத் தின் சிறிய கடமைகளையும், மேலான கடமைகளையும் செய்வதிலேயே நடைமுறை கிறிஸ்தவத்தின் பூரணத்துவம் அடங்கியுள்ளது.

இரண்டாவது, இந்தப் பத்து வசனங்களிலுள்ள ஆவியின் மேலான ஆளுகையும், வல்லமையும் இவ்வுலகத்தில் இருந்திருந்தால், இப்போ திருப்பதைக் காட்டிலும் எவ்வளவு அதிக சந்தோஷமாக இந்த உலகம்

இருந்திருக்கும். மனித இனத்தை சந்திக்கின்ற பாதிப் பிரச்சனைகளுக்கு காரணம் சண்டைகள், விரோதங்கள், தன்னலம் மற்றும் அன்பின்மையே என்பதை யார் அறியாமல் இருக்கிறார்கள்? நமது ஆண்டவரால் இங்கு பரிந்துரைக்கப்பட்ட கிறிஸ்தவ அன்பைப் பரப்புவதை அல்லாமல் வேறொன்றினாலும் இவ்வுலகில் சந்தோஷத்தைப் பெருகச்செய்ய முடியாது என்பதைக் கவனிக்க யார் தவறுவார்? நாம் இதை நினைவில் கொள்வது அவசியம். மனிதர்களை சந்தோஷமற்றவர்களாக மாற்றும் போக்கினை மெய்யான மதம் கொண்டுள்ளது என்று கற்பனை செய்கிறவர்கள் பெரிய தவறிழைக்கிறார்கள்: இந்த ஆவியை அல்லாத எந்த சமயமும் இப்படிப்பட்ட காரியங்களையே செய்யும், ஆனால், இந்த ஆவியையுடைய மதம் அப்படிப்பட்டதல்ல. மெய் மதம் நேருக்கு முரணான விளைவைக் கொண்டுள்ளது: இது மனுஷர்களுக்கு மத்தியில் சமாதானம், அன்பு, இரக்கம் மற்றும் நற்சுவிசேஷத்தை விருத்தியடையச் செய்கிறது. பரிசுத்த ஆவியின் போதனைகளுக்குக் கீழாக அதிகமான ஜனங்கள் கொண்டுவரப்பட்டால், அவர்கள் அதிகமதிகமாய் ஒருவரி லொருவர் அன்புகூர்ந்து, அதிக சந்தோஷத்துடன் வாழ்வார்கள்.

**வேதப்பகுதி : மத்தேயு 6:1-8**

**தலைப்பு : தருமஞ்செய்வதின் பகட்டும், தடைசெய்யப்பட்ட ஜெபமும்**

மலைப்பிரசங்கத்தின் இப்பகுதியில் இருந்து இரண்டு காரியங்களை கர்த்தராகிய இயேசு நமக்குப் போதிக்கிறார்: ஒன்று, தர்மம் அளித்தல்,' மற்றொன்று, ஜெபம். இவ்விரண்டு காரியங்களுக்கும் யூதர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தனர். எல்லா பக்தியுள்ள கிறிஸ்தவர்களின் கவனத்தையும் இவ்விரண்டு காரியங்களும் அதிகமாய் ஈர்க்கின்றன.

தன்னுடைய சீஷர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிற யாவரும் தருமம் செய்வார்கள் என்பதாக நமது ஆண்டவர் எடுத்துக்கொண்டதை நாம் கவனிப்போம். பிறருடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தங்கள் திராணிக்குத் தக்கதாய் அவர்களுக்கு அளிப்பதே பிரதான கடமையாக அவர்கள் எண்ணுவார்கள் என்று நமது ஆண்டவர் கருதுகிறார். அந்தக் கடமையை எவ்விதத்தில் செயலாற்றவேண்டும் என்கிற கருத்தை மட்டும் அவர் கையாளுகிறார். இது மிக முக்கியமான பாடமாகும்: பணம் கொடுக்கின்ற விஷயத்தில் அநேகரிடம் காணப்படும் சுயநலமான கஞ்சத்தனத்தை இது கண்டிக்கிறது. “தங்களுக்கு நேராய் ஐசுவரியவான்களாய்க் கர்த்தருக்கு நேராய் தரித்திரராய்” இருக்கிற ஜனங்கள் எத்தனை பேர்! மனிதர்களுடைய சரீரங்களுக்கும் ஆத்து மாக்களுக்கும் நன்மை உண்டாகும்படி ஒரு பணத்தையாகிலும் ஒரு போதும் தராத ஜனங்கள் தான் எத்தனை பேர்! இப்படிபட்ட மனநிலையை உடையவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதற்கு ஏதேனும் உரிமை உண்டா? அது சந்தேகத்திற்குரியதே, கொடுக்கின்ற இரட்சகருக்குக் கொடுக்கின்ற சீடர்களே இருக்க வேண்டும். தம்முடைய சீடர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிற யாவரும்

ஜெபிப்பார்கள் என்பதாக நமது ஆண்டவர் எடுத்துக்கொண்டதை நாம் கவனிப்போம். இதையும் அவர் முக்கியமான காரியமாகக் கருதுகிறார்: சிறந்த முறையான ஜெபத்திற்கான வழிமுறைகளை மட்டுமே அவர் கொடுக்கிறார். நாம் தொடர்ச்சியாக நினைவுகூற வேண்டிய காரியங்களில் இதுவும் ஒன்று. ஜெபமற்ற ஜனங்கள் உண்மைக் கிஸ்தவர்கள் அல்ல என்று இப்பகுதி மிகத்தெளிவாகப் போதிக்கிறது.

ஞாயிறுதோறும் சபைகளில் ஏறெடுக்கப்படும் ஜெபங்களில் பங்கெடுப்பதும், வாரநாட்களில் குடும்ப ஜெபங்களில் பங்குகொள்வதும் மட்டும் போதாது: தனிப்பட்ட ஜெபங்களும் இருக்க வேண்டும். இந்த ஜெபம் இல்லாவிட்டால். நாம் கிறிஸ்துவினுடைய சபைக்கு புறம்பான அங்கத்தவர்களாய் இருப்போமே அல்லாமல், கிறிஸ்துவுக்கு உயிருள்ள அங்கத்தவர்களாய் இருக்க முடியாது.

எனினும், தருமஞ்செய்தல் மற்றும் ஜெபத்தைப் பற்றியதான நமது வழிகாட்டுதலுக்கான விதிமுறைகள் என்ன? அவைகள் சுருக்கமானவையும், எளிமையானவையுமாகும். இருந்தபோதும், அவைகள் சிந்திப்பதற்கான அநேக கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன.

கொடுப்பதில், பகட்டான காரியங்கள் யாவும் அருவருக்கப்படத் தக்கதும், தவிர்க்கப்பட வேண்டியதுமாய் இருக்கிறது. "ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது . . . உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே." நாம் எவ்வளவு தாராளரும், ஈகை குணம் கொண்டவர்கள் என்றும் ஒவ்வொருவரும் காணும்படியாகவும், நம்முடைய சக மனிதர்களின் போற்றுதலைப் பெற விரும்புகிறவர்களாகவும் நாம் தர்மஞ்செய்யக் கூடாது. விளம்பரஞ் செய்கின்ற காரியங்கள் யாவற்றையும் நாம் புறக்கணிக்க வேண்டும். நாம் அமைதலோடு கொடுத்து, எந்தவிதமான சத்தமுமின்றி தர்மஞ்செய்யக் கடவோம்; "நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக் கடவது," என்ற பழஞ்சொல்லிற்கேற்ற ஆவியைப் பெற நாம் வாஞ்சிப்போம்.

ஜெபிப்பதில், நாம் நாடவேண்டிய முதன்மையான காரியம் கடவுளோடு தனித்திருப்பதே ஆகும். "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து." கடவுளைத் தவிர வேறொருவரும் நம்மைப் பார்க்கவில்லை என்ற உணர்வோடு நாம் நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாக ஊற்றக்கூடியதும், எந்த மனிதக் கண்களினாலும் நாம் காணப்படாதிருக்கிற இடத்தை நாம் கண்டுபிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இந்த விதியை கடைப்பிடிக்க அநேகர் வெகு சிரமப்படுவார்கள்; தரித்திரனும், வேலைக்காரனும் தனிமையாய் இருப்பது இயலாது என்று எண்ணுவார்கள்; ஆயினும் இவ்விதிக்கு கீழ்ப்படியத்தக்க சிறந்த முயற்சிகளை நாம் எடுக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்கள் அவசியமே. அநேக வேளைகளில் இதுவே கண்டுபிடிப்புகளின் தாயாய் இருக்கிறது. ஒருவன், தான் கடவுளோடு தனித்து இருக்கும்படியான

*இடத்தைக் கண்டுபிடிக்க மெய்யான ஆவல் கொண்டிருந்தால், நிச்சயமாக அதற்கான வழியை அவன் கண்டுகொள்வான்.*

*கொடுப்பதோ அல்லது ஜெபிப்பதோ, எதுவாக இருந்தாலும் நம்முடைய எல்லாக் கடமைகளிலும், நாம் மெய்யான இருதயத்தேடலோடும், எல்லாம் அறிகின்ற கடவுளோடுங்கூட அவற்றை கடைபிடிக்கவேண்டும் என்ற சிந்தையே நம் மனதில் இருக்க வேண்டும். "நமது தேவன் அந்தரங்கத்தில் பார்க்கிறவர்." கடமைக்காகவும், போலியாகவும் அல்லது உடன்பாடற்ற வெறும் சரீர சேவையாகவும் இருக்கின்றதனைத்தும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானதும், பயனற்றதுமாய் இருக்கிறது. நாம் கொடுக்கின்ற பணத்தின் நிறையையோ அல்லது நாம் பயன்படுத்துகின்ற வார்த்தைகளின் அளவையோ அவர் எண்ணுகிறதில்லை. எல்லாவற்றை யும் காண்கின்ற அவருடைய கண்ணானது நம்முடைய உள் நோக்கங் களையும், நம்முடைய இருதயங்களின் நிலையை மட்டுமே பார்க்கிறது.*

*இந்தக் காரியங்கள் யாவையும் நாம் நினைவில் வைப்போம். இங்கே இருக்கிற கற்பாறையின் மீது அநேகர் தொடர்ச்சியான ஆத்மீக கப்பற் சேதத்தை விளைவிக்கிறார்கள். சில "மதச்சடங்குகளை" நிறைவேற்றுவதின் மூலம் தங்களுடைய ஆத்துமாக்களில் எல்லாம் சரியாய் உள்ளது என்று தங்களைத் தாங்களே முகஸ்துதி செய்கிறார்கள்: நம்முடைய கொடையின் நிறையை கர்த்தர் பாராமல், நம்முடைய சேவை மனப்பான்மையையே அவர் பார்க்கிறார் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஒரு சில வார்த்தைகளை முறையாக மறுபடியும் மறுபடியும் கூறுவதினாலோ அல்லது ஒரு தர்மச் சத்திரத்துக்கு ஒரு தொகையை சுயநீதியின் கூலியாகக் கொடுப்பதினாலோ அவருடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அநேகர் எண்ணுகிறார்கள். நம்முடைய இருதயங்கள் எங்கே? நாம் கொடுக்கும்போதோ அல்லது ஜெபிக்கும்போதோ எல்லாவற்றையும் மனுஷருக்கென்று இல்லாமல், கர்த்தருக்கென்று செய்கிறோமா? "நாம் கர்த்தருடைய பார்வையை அறிந்திருக்கிறோமா ?" "அந்தரங்கத்தில் பார்க்கிறவரும்", "செயல்கள் யாவும் அவரால் மதிப்பிடப்படுகிற" கர்த்தரின் தயையைப் பெற நாம் முழுமையாக வாஞ்சிக்கிறோமா? நாம் உண்மை யுள்ளவர்களா? இவ்வகைக் கேள்விகளினால் நாம் நம்முடைய ஆத்துமாக் களை அடிக்கடி சோதிக்க வேண்டும்.*

**வேதப்பகுதி : மத்தேயு 6:9-15**

**தலைப்பு : கர்த்தருடைய ஜெபமும், ஒருவரை ஒருவர் மன்னிக்கின்ற கடமையும்**

*இவ்வசனங்கள் எண்ணிக்கையில் குறைவாயும், எளிதில் வாசிக்கக் கூடியதாயும் இருந்தாலும், இவை அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. கர்த்தராகிய இயேசு தமது ஜனங்களுக்கு அளித்த ஆச்சரியமான ஜெப மாதிரியை இவ்வசனங்கள் உள்ளடக்கி உள்ளது. இதை பொதுவாக "கர்த்தருடைய ஜெபம்" என்றழைப்பர்.*

*இப்பகுதியைப் போன்று வேறெந்த வேதப்பகுதியும் அவ்வளவு பிரபல்யமானதல்ல. கிறிஸ்தவம் எங்கெல்லாம் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் இவ்வார்த்தைகள் நன்கு பழக்கமானவை. ஒருபோதும் வேதத்தைக் கண்டிராத, மெய் சுவிசேஷத்தைக் கேட்டிராத பல்லாயிரக் கணக்கான ஜனங்களுக்கு "பரமண்டலங்களிருக்கிற எங்கள் பிதாவே" என்கிற இந்த ஜெபம் மிகவும் பரிச்சயமானதாய் இருக்கிறது. வார்த்தைகளில் பரிச்சயமான இந்த ஜெபமானது அதன் மெய்க் கருத்திலும் பரிச்சயமாய் இருந்தால் இவ்வுலகத்திற்கு அதிக சந்தோஷம் உண்டாயிருக்கும்.*

*இப்பகுதியைப் போல முழுமையும், எளிமையுமான வேதப்பகுதி வேறொன்றும் இல்லை. நாம் சிறு குழந்தைகளாய் இருந்தபோது கடவுளிடம் ஏறெடுக்கும்படி கற்றுக்கொண்ட முதல் ஜெபம் இது. இதனுடைய தாழ்மை இங்கே உள்ளது. மிகவும் முதிர்ச்சி அடைந்த பரிசுத்தவான் வாஞ்சிக்கின்ற வித்தை இது கொண்டுள்ளது. அதனுடைய முழுமை இங்கே இருக்கிறது. நாம் ஒவ்வொரு வார்த்தையையும் அதிகமாய் ஆராய்ந்தால், "இது கர்த்தருடைய ஜெபம்" என்று நாம் உணர வல்ல அதிகமான காரியங்களை இது கொண்டுள்ளது.*

*கர்த்தருடைய ஜெபமானது பத்துப் பகுதிகளை அல்லது வாக்கியங்களைக் கொண்டு அமைந்துள்ளது. நாம் விண்ணப்பிக்கின்ற நபரிடம் ஒரு உறுதிமொழியை ஏற்படுத்துகிறோம். அவருடைய நாமம், அவருடைய ராஜ்யம் மற்றும் அவருடைய சித்தத்தை மதிக்கின்ற மூன்று விண்ணப்பங்கள் இங்கே இருக்கின்றன; மேலும் நமது அன்றாடத் தேவைகள், நமது பாவங்கள் அல்லது பலவீனங்கள் மற்றும் நமது ஆபத்துக்களைக் குறிக்கின்ற நான்கு ஜெபங்களும் இருக்கின்றன. பிறரிடம் நமது உணர்வை பகிரங்கமாக கூறுகின்ற ஒரு விண்ணப்பத்தையும், ஒரு முடிவான புகழுரையையும் கொண்டது இந்த மாதிரி ஜெபம்.*

*இவ்வனைத்துப் பகுதிகளிலும் "நாம்" மற்றும் "நம்முடைய" என்று சொல்லும்படியாக நாம் பயிற்றுவிக்கப்படுகிறோம். நாம் மற்றவர்களை நினைவு கூருவதைப்போல, நம்மை நாமே நினைவுகூரவேண்டும். ஒவ்வொரு பகுதியையும் பற்றி ஓர் அத்தியாயமே எழுதலாம். நாம் தற்போது, இப்பகுதியிலுள்ள வாக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக் கொள்வதில் திருப்தியுற்று, ஒவ்வொரு வாக்கியங்களிலும் அடங்கியுள்ள கருத்துக்களைக் குறித்துக்கொள்வோம்.*

*யாரிடம் நாம் ஜெபிக்க வேண்டும் என்பதை முதலாவது வாக்கியம் நமக்குப் போதிக்கிறது. "பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே." நாம் பரிசுத்தவான்களிடத்திலும், தேவதூதர்களிடமும் ஜெபிக்காமல், நித்திய பிதாவும், ஆவிகளின் தேவனும், வானத்திற்கும், பூமிக்கும் ஆண்டவருமாகிய பிதாவினிடத்தில் ஜெபிக்கவேண்டும். "அவருக்குள் பிழைக்கிறோம்; அசைகிறோம், இருக்கிறோம்" என்று அத்தேனே பட்டணத்தாரிடத்தில் பரிசுத்த பவுல் கூறியதைப் போல, நமது*

சிருஷ்டிகராகிய அவரைப் “பிதாவே” என்று அழைக்கிறோம் (அப்போஸ்தலர் 17:28). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவும், தன்னுடைய குமாரனுடைய மரணத்தின் மூலமாய் தம்மோடு நம்மை ஒப்புரவாக்கினதினாலே, நம்முடைய மேலான அறிவில், அவரைப் “பிதாவே” என்று நாம் அழைக்கிறோம் (கொலோசெயர் 1:2022). பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் “பிதாவை” மங்கலாயும், வெகு தொலைவிலுமே கண்டார்கள் என்று அறிக்கையிடுகிற நாம், கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். மேலும், “அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திர சுவிகாரத்தின் ஆவியையும்” நாம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 8:15). இதை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது: நாம் இரட்சிக்கபடும்படிக்கு அவருடைய குமாரத்துவத்தில் நாம் வாஞ்சையாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவினுடைய இரத்தத்தை விசுவாசியாமலும் அவரோடு ஐக்கியங்கொள்ளாமலும் இருந்து, கர்த்தருடைய “பிதாத்துவத்தில்” நம்பிக்கையாய் இருக்கிறோம் என்ற பேச்சு பிரயோஜனமற்றது.

கர்த்தருடைய நாமத்தை மதிக்கின்ற விண்ணப்பமாக இரண்டாவது வாக்கியம் உள்ளது. “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.” கர்த்தருடைய “நாமம்” என்றால் அவருடைய வல்லமை, ஞானம், பரிசுத்தம், நீதி, இரக்கம் மற்றும் உண்மை ஆகிய அத்தனைக் குணாதிசயங்களின் அடிப்படையில் அவர் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். “பரிசுத்தப்படுவதாக” என்று நாம் அழைப்பதினால், அவருடைய நாமம் எங்கும் அறியப்பட்டு, மகிமைபடுத்தப்படும் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். கர்த்தருடைய பிள்ளைகள் வாஞ்சிக்க வேண்டிய முதலாவது காரியம், கர்த்தருடைய மகிமையே. “பிதாவே, உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்” என்பது நமது ஆண்டவரின் தனிப்பட்ட ஜெபங்களின் நோக்கங்களில் ஒன்றாகும் (யோவான் 12:28). இந்நோக்கத்திற்காகவே உலகம் படைக்கப்பட்டது; இம்முடிவிற்காகவே பரிசுத்தவான்கள் அழைக்கப்பட்டும், மனமாற்றமடைந்தும் இருக்கிறார்கள்; “எல்லாவற்றிலேயும் தேவன் மகிமைப்படவேண்டும்” என்ற பிரதான காரியத்தையே நாம் நாடவேண்டும் (1 பேதுரு 4:11).

கர்த்தருடைய ராஜ்ஜியத்தை பற்றியதான விண்ணப்பமாக மூன்றாவது வாக்கியம் அமைந்துள்ளது. அவருடைய இராஜ்ஜியம் என்று முதலாவதாக, நாம் அர்த்தப்படுத்துவது என்னவெனில், கர்த்தர் தமது கிருபையின் ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, தமது ஆவியினாலும் வார்த்தையினாலும் கிறிஸ்துவின் எல்லா ஜீவனுள்ள அங்கத்தவர்களின் இருதயங்களிலும் அதை நிர்வகிக்கிறார் என்பதே. ஆனால், நாம் பிரதானமாகக் கருதுவது என்னவெனில், இயேசுவின் இரண்டாம் வருகையின்போது, ஒரு நாள் மகிமையின் ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும். “அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் அவரை அறிவார்கள்” (எபிரெயர் 8:11). இவ்வேளையில் தானே உலகத்தில் இருந்து, பாவம், துக்கம் மற்றும் சாத்தானை தூக்கி எறியப்படும். அந்த காலக்கட்டத்தில் தாமே

*யூதர்கள் மனந்திரும்பி, புறஜாதியாருடைய நிறைவு உண்டாயிருக்கும் (ரோமர் 11:25). மேலும், இவை எல்லாம் நிறைவேற வாஞ்சிப்பதும் இந்த வேளையில்தான். எனவே, கர்த்தருடைய ஜெபத்தில் இது முதன்மையான இடம் வகிக்கிறது. "கர்த்தருக்குச் சித்தமானால், தம்முடைய ராஜ்ஜியத்தை துரிதப்படுத்தும்" என்று அடக்க ஆராதனையில் சொல்லப்படுகின்ற வார்த்தைகளை நாம் கேட்போம்.*

*"உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறது போல, பூமியிலேயும் செய்யப்படுவதாக". கர்த்தருடைய சித்தத்தை பற்றியதான விண்ணப்பமாக நான்காவது வாக்கியம் அமைந்துள்ளது. பரலோகத்திலுள்ள தேவதூதர்களால் கர்த்தருடைய கட்டளைகள் யாவும் பூரணமாய், ஆயத்தமாய், இடையறாத வகையில் கீழ்ப்படியப்படுவதைப் போல, பூமியிலே மனிதர்களாலும் கீழ்ப்படியப்படும்படி நாம் ஜெபிக்கலாம். அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்கள் அவைகளுக்குக் கீழ்ப்படியும்படி கற்றுக்கொடுக்கப்படவும், அவைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இன்னும் அதிகமாய் அவைகளைக் கைக்கொள்ளவும் நாம் விண்ணப்பிப்போம். கர்த்தருடைய சித்தத்திற்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுப்பதே நம்முடைய மெய்யான சந்தோஷமாய் இருக்கும். மேலும், அனைத்து மனித சமூகமும் அவருடைய சித்தத்தை அறிந்து, கீழ்ப்படிந்து, அதற்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டி நாம் ஜெபிப்பதே நம்முடைய உன்னதமான தர்மமாகும்.*

*"எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்". நம்முடைய அன்றாடத் தேவைகளைக் குறிக்கும் விண்ணப்பமாக ஐந்தாவது வாக்கியம் உள்ளது. நம்முடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நாம் முழுவதுமாகக் கர்த்தரை சார்ந்திருக்கிறோம் என்று அங்கீகரிக்க நாம் இங்கு கற்றுக் கொள்கிறோம். இஸ்ரவேலர் அநுதின "மன்னாவை" கேட்டதுபோல நாமும் அநுதின "ஆகாரத்தை" கேட்கிறோம். நாம் தரித்திரர், பலவீனர், தேவையுள்ள சிருஷ்டிகள் என்பதை உணர்ந்து, அறிக்கையிட்டு, நம்முடைய சிருஷ்டிகராகிய அவரிடத்தில் நம்மை பாதுகாக்கும்படி வேண்டுகிறோம். நம்முடைய அத்தியாவசிய தேவைகளில் எளிமையானதான "ஆகாரத்தை" தரும்படி நாம் கேட்கும்போது, நம்முடைய அனைத்து சரீரத் தேவைகளும் அந்த ஒரே வார்த்தையில் அடங்கிவிடுகிறது.*

*"எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்". நம்முடைய பாவங்களை குறித்ததான விண்ணப்பமாக ஆறாவது வாக்கியம் உள்ளது. நாம் பாவிகள் என்றும், அநுதினமும் நமக்கு பாவமன்னிப்பும், உதவியும் வேண்டியதாய் இருக்கிறது என்றும் நாம் அறிக்கையிடுகிறோம். கர்த்தருடைய ஜெபத்தில் விசேஷமாக நினைவில் வைத்திருக்கக்கூடிய பகுதி இது. இது எல்லா சுய ஒழுக்கத்தையும், சுயநீதியையும் கடிந்துகொள்கிறது. கிருபாசனத் தண்டையில் நாம் பாவ அறிக்கை செய்யும் வழக்கத்தையும், இரக்கம் மற்றும் பாவமன்னிப்பு வேண்டி கர்த்தரை நாடும் வழக்கத்தையும்*

*தொடர்ச்சியாக நிறைவேற்ற நாம் இங்கே போதிக்கப்படுகிறோம். இதை ஒருபோதும் மறக்கக்கூடாது. நாம் அநுதினமும் "நம்முடைய கால்களைக் கழுவ வேண்டியது" அவசியம். (யோவான் 13:10).*

*பிறரிடம் நமக்கான உணர்வை வெளிப்படுத்துகின்ற வாக்கியமாக ஏழாவது வாக்கியம் உள்ளது. "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" என்று பிதா வினிடத்தில் நாம் கேட்போம். முழு ஜெபத்திலும் இது ஒன்றே வெளிப்படையான அறிவிப்பாகும். மேலும், நமது ஆண்டவர் ஜெபத்தை முடிக்கும்போது விமர்சித்ததும் விவரித்ததுமான ஒரே பகுதி இதுதான். பிறருக்கு விரோதமாக வன்மங்களையும் வஞ்சகங்களையும் நம் இருதயத்தில் வைத்துக்கொண்டு நாம் ஜெபித்தால், பாவமன்னிப்புக்கென்று ஏறெடுக்கப்படும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படும் என்று நாம் எதிர் பார்க்கக்கூடாது என்ற கருத்தையே இது நமக்கு நினைவுபடுத்துகிறது. இப்படிப்பட்ட மனநிலையோடு ஏறெடுக்கப்படும் ஜெபமானது வெறும் சடங்காயும், மாய்மாலமாயும் இருக்கும்: இது மாய்மாலத்தைக் காட்டிலும் மோசமானதாகும் "என்னை மன்னிக்கவே மன்னிக்காதீர்" என்று சொல்வதற்கு இணையாகும். கருணையற்ற நமது ஜெபங்கள் பிரயோ ஜனமற்றவை. நம்மால் பிறரை மன்னிக்க முடியாவிடில், நாம் மன்னிக்கப் படுவோம் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது.*

*"எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல்" என்ற, நமது பலவீனங்கள் தொடர்பான விண்ணப்பமாக எட்டாவது வாக்கியம் அமைந்துள்ளது. நாம் எல்லா வேளைகளிலும், கடவுளை விட்டு வழிவிலகி விழுந்துப் போகக்கூடியநிலையில் இருக்கிறோம் என்று இவ்வாக்கியம் நமக்கு போதிக்கிறது: நம் பலவீனங்களை அறிக்கையிட்டு, நாம் பாவத்தில் வீழ்ந்துபோக அனுமதிக்காமல் நம்மை தாங்கி பிடிக்கும்படி கர்த்தரிடத்தில் மன்றாடவும் இது நமக்கு போதிக்கிறது. நம் ஆத்துமாக்களை சேதப்படுத்துகின்ற காரியங்களுக்கு நாம் போகாதபடி நம்மை தடுக்கவும், நாம் ஒருபோதும் "நம்முடைய திராணிக்கு மேலான சோதனைகளினால் சோதிக்கபடாதபடி" நம்மைக் காக்கவும், வானத்தையும், பூமியையும், அதிலுள்ள யாவையும் ஆளுகிற நமது ஆண்டவரிடத்தில் நாம் கேட்கக் கடவோம் (1 கொரி. 10:13).*

*"தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்". நமது ஆபத்துக்கள் தொடர்பான விண்ணப்பமாக ஒன்பதாவது வாக்கியம் உள்ளது. இவ்வுலகத்திலுள்ள தீமைகளிலிருந்தும், எல்லாவற்றிற்கும் மேலாக, சாத்தானின் தீமையினின்றும் இரட்சிக்கப்பட நாம் கர்த்தரிடத்தில் கேட்கும்படியாக இங்கு நாம் கற்றுக்கொள்கிறோம். நாம் இந்த சரீரத்தில் இருக்கும்வரை, தீமைகளின் பிரசன்னத்தைக் காண்கிறோம், கேட்கிறோம் மற்றும் உணர்கிறோம் என்று நாம் அறிக்கையிடுவோம். தீமையானது நம்மை பற்றியும், நமக்குள்ளும், எப்பக்கத்திலும் நம்மைச் சுற்றிலும் இருக்கிறது; நம்மை தீமையின் வல்லமையில் இருந்து தொடர்ந்து இரட்சிக்கவும், பாதுகாக்கவும் வல்ல ஒரே தேவனாகிய அவரிடம் நாம்*

*மன்றாடலாம் (யோவான் 17:15).*

*"இராஜ்ஜியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே". கடைசி வாக்கியமானது கர்த்தருடைய ஜெபத்தின் புகழுரையாகும். இவ்வுலகில் உள்ள எல்லா இராஜ்ஜியங்களும் நம்முடைய பிதாவின் நியாயமான ஆஸ்திகளாகும்; எல்லா "வல்லமையும்" அவர் ஒருவருக்கே உரியது; எல்லா "மகிமையும்" பெற்றுக்கொள்ள அவர் ஒருவரே பாத்திரர் என்ற இந்த வார்த்தைகளின்மூலம் நம்முடைய விசுவாசத்தை நாம் அறிக்கையிடுகிறோம். எல்லா கனத்தையும் துதிகளையும் நாம் அவருக்கே கொடுக்கிறோம் என்றும், இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாகிய அவரில் நாம் களிகூறுகிறோம் என்றும் நம் இருதயங்களின் வெளிப்படையான அறிவிப்பை அவருக்கு ஏறெடுப்பதின்மூலம் இந்த ஜெபத்தை நாம் நிறைவுசெய்கிறோம்.*

*கர்த்தருடைய ஜெபத்தில் கேட்கும்படி நமக்கு கற்றுக்கொடுக்கப்பட்ட காரியங்களுக்காக நாம் மெய்யாக வாஞ்சிக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துப் பார்க்கக் கடவோம். ஆயிரக்கணக்கானோர், இந்த ஜெபத்தை முறையாக, பயத்தோடு தினமும் ஏறெடுக்கிறார்கள், ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று ஒருபோதும் சிந்திப்பதில்லை. அவர்கள் "மகிமை", "இராஜ்ஜியம்" அல்லது "கர்த்தருடைய சித்தம்" குறித்து கவலைப்படவில்லை; சார்ந்திருத்தல், பாவம், பலவீனம் அல்லது தீமைகளை குறித்ததான எந்த அறிவும் அவர்களுக்கு இல்லை, தங்களுடைய எதிராளிகளுக்கு நேராக அவர்களிடத்தில் அன்போ, இரக்கமோ கிடையாது; இருந்தபோதிலும், அவர்கள் கர்த்தருடைய ஜெபத்தைத் தொடர்ந்து சொல்லுகிறார்கள்! இக்காரியங்கள் இப்படி இருக்கக் கூடாது. கர்த்தரின் துணையோடு நாம் இதை சரிசெய்து, நம்முடைய இருதயங்கள் எப்போதும் நம்முடைய உதடுகளோடு சொல்லும்படி பார்த்துக்கொள்வோம்! தன்னுடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் கடவுளை தன்னுடைய "பிதா" என்று மெய்யாய் அழைக்கிற எவனும் பாக்கியவான். எனவே, கர்த்தருடைய ஜெபத்தில் அமைந்துள்ள எல்லாவற்றிற்காகவும் இருதயத்தின் ஆழத்திலிருந்து "ஆமென்" என்று சொல்லக்கடவன்.*

**வேதப்பகுதி : மத்தேயு 6:16-24**

**தலைப்பு : உபவாசித்தலின் சரியான முறைமை, பரலோகத்தின் பொக்கிஷம்**

*நமது ஆண்டவரின் மலைப் பிரசங்கத்தின் இந்தப் பகுதியில் இருந்து நமக்கு மூன்று காரியங்கள் விளக்கப்படுகின்றது. அவையாவன: உபவாசம், உலகப் பற்று மற்றும் நம் ஜீவ வாழ்க்கையின் தனித்துவம்.*

*உபவாசம் அல்லது சரீரத்தை ஆவிக்குக் கீழ்ப்படுத்தும் பொருட்டு சிறப்பான தருணங்களில் ஆகாரத்தை விலக்கி வைக்கின்ற செயல்*

*வேதத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வழக்காகும். மேலும், இது பொதுவாக, ஜெபத்தோடு தொடர்புடையது. தன்னுடைய பிள்ளை வியாதியாய் இருந்தபோது, தாவீது உபவாசித்தான்; கர்த்தரிடம் இருந்து விசேஷித்த ஞானத்தைப் (ஒளியை) பெற நாடினபோது, தானியேல் உபவாசித்தான்; மூப்பர்களை நியமிக்கும்போது, பவுலும், பர்னபாவும் உபவாசித்தார்கள்; அகாஸ்வேரு ராஜாவுக்கு முன்பாகச் செல்லும்போது, எஸ்தர் உபவாசித்தாள். புதிய ஏற்பாட்டில் இக்காரியத்தைக் குறித்ததான நேரிடையான கட்டளையை நாம் காண முடியாது. ஒருவன் உபவாசிப்பதோ அல்லது உபவாசியாமல் இருப்பதோ அவனுடைய பகுத்தறிவின் தீர்மானத்திற்கென்று விடப்பட்டுள்ளது. நேரடியான கட்டளை கொடுக்கப்படாவிட்டாலும், இதுபற்றிய சிறப்பான ஞானத்தை நாம் காணலாம். அநேக ஏழை மக்கள் போதுமான அளவு சாப்பிடாதிருக்கும் போது, அவர்களை உபவாசிக்கச் சொல்லுவது நிந்திப்பதாகும்: அநேக வியாதியஸ்தர்கள் தங்கள் உடல்நலன் கருதி பத்திய உணவை உட்கொள்ளும்போது, நோய்களை வரவழைக்காமல் அவர்களால் உபவாசம் இருக்க இயலாது. இக்காரியத்தைக் குறித்து ஒவ்வொருவனும் தன் தன் மனதிலே தூண்டப்பட்டு, தன்னோடு இதில் ஒத்துவராத யாரையும் கடினமாய் கடிந்துகொள்ளாதிருக்கக் கடவன். ஒரு காரியத்தைக் குறித்து ஒருவரும் மறந்துவிடக்கூடாது: உபவாசிப்பவர்கள் அமைதலோடு, அந்தரங்கத்தில் பகட்டில்லாமல் உபவாசிக்கக் கடவர்கள். அவர்கள் உபவாசிக்கும்போது, "மனுஷர்களுக்குக் காணப்படாமல்" உபவாசிக்க வேண்டும். அவர்கள் மனுஷர் காணும்படி உபவாசியாமல், கர்த்தர் காணும்படி உபவாசிக்கக் கடவர்கள்.*

*மனிதனுடைய ஆத்துமாவை வளைத்துக் கொள்கின்ற பயங்கரமான ஆபத்துக்களில் உலகப்பற்றும் ஒன்றாகும். நமது ஆண்டவர் இதைக் குறித்து கடினமாய்ப் பேசுவதைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை; இது கபடமான, தந்திரமான எதிரி; நம்முடைய வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்தும்படிக் கூறும்போது கபடற்றதாய் காணப்படும். நாம் வெளிப்படையான பாவங்கள் செய்யாதவரை இவ்வுலக சிற்றின்பங்களை நாடும்படி வழிக்காட்டும்போது தீங்கற்றதாய் காணப்படும். எனினும், அநேகர் இந்த கற்பாறையின் மீது மோதி நித்தியத்திற்கு போகிறவழியில் கப்பற்சேதம் அடைகிறார்கள்! "பூமியிலே தங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிற" அவர்கள் "பரலோகத்தில் தங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க மறந்துவிடுகிறார்கள்." நாம் இவை எல்லாவற்றையும் நினைவுகூருவோமாக! நம்முடைய இருதயங்கள் எங்கே? நாம் எதை அதிகமாய் நேசிக்கிறோம்? நம்முடைய பிரதான விருப்பங்கள் பூமியிலுள்ள பொருட்கள் மீதா அல்லது பரலோகத்தில் உள்ள பொருட்கள் மீது உள்ளதா? இக்கேள்விகளுக்கு நாம் அளிக்கக்கூடிய விடைகளிலேயே நம்முடைய வாழ்வும், மரணமும் அடங்கியுள்ளது. நம்முடைய பொக்கிஷங்கள் உலகபிரகாரமானவையாக இருந்தால், நம்முடைய இருதயங்களும் உலகத்தில் இருக்கும். "உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்."*

ஆத்மீக விருத்திக்கான மேன்மையான இரகசியங்களில் நோக்கத்தின் ஒருமையும் ஒன்று. நம்முடைய கண்கள் தெளிவாய்ப் பார்க்காவிட்டால், நாம் தடுமாறாமலும், இடறி விழாமலும் நடக்க முடியாது. நாம் வெவ்வேறான இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய முயற்சித்தால், நிச்சயமாக நம்மால் ஒருவருக்கும் திருப்தி அளிக்க முடியாது. நம்முடைய ஆத்துமாக்களைக் குறித்த காரியமும் இப்படிப்பட்டதே. ஒரே வேளையில் நாம் கிறிஸ்துவுக்கும், இவ்வுலகிற்கும் சேவைசெய்ய முடியாது. அப்படி செய்ய முயற்சிப்பது வீணாய் இருக்கும். இந்த காரியம் செயல்பட முடியாது.

நம்முடைய இருதயங்களின்மீது ஆண்டவர் ராஜாவாய் இருக்க வேண்டும். அவருடைய நியாயப்பிரமாணம், அவருடைய சித்தம் மற்றும் அவருடைய போதனைகளே நம்முடைய முதல் கவனத்தை பெற வேண்டும்; பின்னர், நம்முடைய உள்ளான மனுஷனிலுள்ள எல்லாம் அதினதின் இடத்தில் சரியாய் இருக்க வேண்டும். நம்முடைய இருதயங்கள் சீராக ஒழுங்கில்லாது இருந்தால், எல்லாமே குழப்பமாகத் தான் இருக்கும். “உன் சரீரம் முழுவதும் இருளாயிக்கும்.”

நமது மதத்தில் உற்சாகத்தினுடைய மேலான முக்கியத்துவம் உபவாசம். இதைப் பற்றியதான நமது ஆண்டவரின் போதனைகளில் இருந்து நாம் கற்றுக்கொள்வோம். “உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு” என்ற வார்த்தைகள் ஆழமான அர்த்தங்களினால் நிறைந்து இருக்கிறது. கிறிஸ்தவம் நம்மை சந்தோஷமுள்ளவர்களாக மாற்றுகிறது என்று மனிதர்கள் காணும்படிச் செய்வதே நமது குறிக்கோளாய் இருக்க வேண்டும் என்று அவை போதிக்கின்றன. விசாரமற்றதாயும், சோகமாயும் எந்த மதமும் காணப்படவில்லை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. கிறிஸ்துவினுடைய சம்பாத்தியம் மற்றும் கிறிஸ்துவினுடைய ஊழியத்தில் நாம் திருப்தியற்றவர்களாய் இருக்கிறோமா? நிச்சயமாக இல்லை! ஆகவே, நாம் முன்பு காணப்பட்டது போல இனிக் காணப் படாதிருப்போம்.

உலகப்பற்று பற்றியதான நமது ஆண்டவரின் எச்சரிக்கையை நாம் எண்ணிப் பார்ப்போமே. ஒரு உலகத்தின் ஆவிக்கு எதிராக விழிப் பாயிருந்து ஜெபிக்க வேண்டியதின் அவசியம் நமக்கு இருக்கிறது. நம்மைச் சுற்றிலும் இருக்கிற பெரும்பாலான பயபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் என்ன செய்கிறார்கள்? “அவர்கள் பூமியிலே தங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வைக்கிறார்கள்”. அதில் எந்தத் தவறும் இருக்க முடியாது, ஆனால், அவர்களுடைய விருப்பங்கள், அவர்களுடைய வழிகள் மற்றும் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் யாவும் நமக்கு பயங்கரமான கதையையே கூறுகின்றன. அவர்கள் “தங்கள் பொக்கிஷங்களைப் பரலோகத்தில் சேர்த்து வைக்கவில்லை.” நியாயமான காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதின் மூலம் நம்முடைய ஆத்துமாக்கள் நரகத்தில் அமிழ்ந்துபோகாதபடி நாம் எச்சரிக்கையாய் இருப்போம். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் பகிரங்கமான மீறுதல் ஆயிரமாயிரம்

*பேரைக் கொல்லும், ஆனால் உலகப்பற்று பல்லாயிரக்கணக்கானோரை அழித்துவிடும்.*

*"ஒரு கண்" பற்றியதான நமது ஆண்டவரின் வார்த்தைகளில் இருந்து அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் காண்கின்ற தோல்விகளின் உண்மை இரகசியங்களை நாம் கற்றுக்கொள்ளுவோம். எல்லாப் பகுதி களிலும் தோல்வியே. நம்முடைய திருச்சபைகளில் ஆயிரமானோர் அசௌகரியமாய், சுகமற்றவர்களாய், தங்களில் தாங்களே திருப்தி அற்றவர்களாய் காணப்படுகிறார்கள்; ஏன் என்று அவர்கள் மிக அரிதாக அறிவார்கள். அதற்கான காரணம் இப்பகுதியில் வெளிப்படுத்தப்பட் டுள்ளது: அவர்கள் இரண்டு பக்கங்களையும் சீராக வைக்க முயற்சிக் கிறார்கள்; அவர்கள் கர்த்தரையும், மனிதனையும் திருப்திபடுத்த பிரயத்தனம் செய்கிறார்கள்; ஒரே சமயத்தில் கிறிஸ்துவுக்கும், உலகத்திற்கும் உழைக்க பிரயாசப்படுகிறார்கள். இந்தத் தவறை நாம் செய்யாதிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் தீர்மானிக்கப்பட்டவர்களாய், பரிபூரணராய், இணங்காத சீஷர்களாய் இருப்போம். "ஒன்று செய்கிறேன்: பின்னானவை களை மறந்து, முன்னானவைகளை நாடி" என்ற பவுலினுடைய வார்த்தைகள் நமது குறிக்கோளாய் இருக்கட்டும் (பிலிப்பியர் 3:13). பின்னர், நாம் சந்தோஷமான கிறிஸ்தவர்களாய் இருப்போம். நம் முகத்தின்மீது சூரியன் பிரகாசிப்பதை நாம் உணரலாம்; நம்முடைய இருதயம், தலை மற்றும் மனசாட்சி யாவும் வெளிச்சத்தால் நிறைந்திருக்கும். முடிவெடுத் தலே கிறிஸ்தவ சந்தோஷத்தின் இரகசியமாகும். கிறிஸ்துவுக்கென்று நிச்சயிக்கப்பட்டவர்களாய் இருங்கள், அப்பொழுது, "உங்கள் சரீர முழுவதும் வெளிச்சமாய் இருக்கும்."*

**வேதப்பகுதி : மத்தேயு 6:25-34**

**தலைப்பு : புறக்கணிக்கப்பட்ட இந்த உலகத்தைப் பற்றி அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

*நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் போதனையின் ஒருங்கிணைப்பான ஞானம் மற்றும் இரக்கத்திற்கான ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு இவ்வசனங்கள் ஆகும். அவர் மனுஷனுடைய இருதயத்தை அறிவார். உலகப்பற்றிற்கு எதிரான எச்சரிப்புகளை நாம் உதறிவிட எப்போதும் ஆயத்தமாய் இருப்போம் என்பதை இவ்வுலக வாழ்க்கையின் காரியங்களைப் பற்றிய நமது ஆர்வத்தினால் உண்டான வாதத்தில் இருந்து அவர் அறிவார். நமக்குக் கொடுப்பதற்காக நமது குடும்பங்கள் நமக்கு இல்லையா? நம்முடைய சரீரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையா? நம்முடைய ஆத்துமாவைக் குறித்து முதலில் சிந்தித்தால், எப்படி நம்முடைய வாழ்க்கையை எளிதாக நடத்திச் செல்ல முடியும்? கர்த்தராகிய இயேசு இப்படிப்பட்ட சிந்தனைகளை முன்பே அறிந்து, அதற்கான விடையை அளித்திருக்கிறார்.*

*இவ்வுலக காரியங்களைக் குறித்ததான துக்கமுள்ள ஆவியை விட்டு*

*விலகும்படி கர்த்தர் நமக்குப் போதிக்கிறார். “கவலைப்படாதிருங்கள்” என்று அவர் நான்கு முறை கூறுகிறார். சரீரத்திற்காக, ஆகாரத்திற்காக, உடைக்காக மற்றும் நாளைய தினத்திற்காகக் “கவலைப்படாதிருங்கள்”. அதிக ஜாக்கிரதையாயும், அதிக ஆர்வமுடன் இராதேயுங்கள். எதிர் காலத்தைக் குறித்த விவேகமான முன்னேற்பாடு சரியே. உடுத்தல், அருந்துதல் மற்றும் தன் தேவைகள் சம்பந்தமான அளவுக்குமீறிய ஆர்வம் தவறு.*

*கடவுள் தாம் சிருஷ்டித்த எல்லாவற்றிற்கும் தெய்வாதீனமான பாதுகாப்பைத் தொடர்ந்து அளிக்கிறார் என்பதை நமக்கு அவர் நினைவு படுத்துகிறார். அவர் நமக்கு “ஜீவனைக்” கொடுத்திருக்கிறாரா? அப்படியானால், நிச்சயமாக அதன் பராமரிப்பிற்கு தேவையான அனைத் துக் காரியங்களையும் அவர் நமக்குத் தருவார். அவர் நமக்கு “சரீரத்தைக்” கொடுத்திருக்கிறாரா? அப்படியானால், நிச்சயமாக அவர் நம்மை உடைக்காக அழிந்துபோக விடமாட்டார். நம்மை ஜீவனுள்ளோராக அழைத்த தேவன் சந்தேகமின்றி நம்மை ஆகாரத்தினால் போஷிப்பார்.*

*அதிக ஜாக்கிரதையின் பிரயோஜனமற்றத் தன்மையை அவர் குறிப்பிடுகிறார். நம்முடைய வாழ்க்கை நிச்சயமாகக் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. இவ்வுலகில் உள்ள எல்லா ஆதரவும் கடவுள் நமக்குக் நிர்ணயித்த காலத்தைக் கடந்து ஒரு மணித்துளிக்கூட நம்மை தொடர்ந்து பாதுகாக்காது. நம்முடைய வாழ்க்கையோடு ஒரு மணி நேரத்தைக்கூட நம்மால் கூட்ட முடியாது. நம்முடைய பணி நிறைவேறும் வரை நாம் மரணமடைய முடியாது.*

*ஆகாயத்துப் பறவைகளினிடத்தில் கற்றுக் கொள்வதற்காக அவர் நம்மை அனுப்புகிறார். “அவைகள் விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை”: அவைகள் தங்கள் எதிர்காலத்திற்கான முன்னேற்பாடுகளைச் செய்வது மில்லை; அவைகள் “களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை”. இனிவரும் காலத்திற்கென்று எதையும் களஞ்சியங்களில் அவைகள் சேர்ப்பதில்லை; கடவுள் அவைகளுக்குத் தந்த உள்ளுணர்வை பயன்படுத்தி அநுதினமும் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெற்றுக்கொண்டு வாழ்கின்றன. எந்தவொரு மனிதனும் கர்த்தர் தன்னை அழைத்த ஸ்தானத்தின் பணியை சரியாய்ச் செய்தால், அவன் ஒருபோதும் தரித்திரனாக அனுமதிக்கப்படான் என்று ஆகாயத்துப் பறவைகள் நமக்கு போதிக்கின்றது.*

*காட்டுப் புஷ்பங்களை கவனிக்கும்படி அவர் நமக்கு கட்டளையிடுகிறார் சொற்ப உழைப்போ அல்லது கடின உழைப்போ அவைகளின் பங்காய் இல்லாதபோதுங்கூட, ஆண்டாண்டு காலமாய், அவைகள் பிரகாசமான வண்ணங்களினால் அலங்கரிப்படுகின்றன. “அவைகள் உழைக்கிறது மில்லை; நூற்கிறதுமில்லை.” கர்த்தர், தம்முடைய சர்வவல்லமையினால் அவைகளை ஒவ்வொரு காலத்திலும் அழகாய் உடுத்துவிக்கிறார். அதே கர்த்தர்தான் எல்லா விசுவாசிகளுக்கும் தகப்பன். “காட்டுபுஷ்பங்களை”*

*பார்க்கிலும் அவர்களை அழகாய் உடுத்துவிக்க அவரால் முடியும் என்பதை அவர்கள் ஏன் சந்தேகிக்கவேண்டும்? அழிந்துபோகின்ற புஷ்பங்களைக் குறித்து சிந்திக்கிற அவர், நிச்சயமாக, அழிவில்லாத ஆத்து மாக்கள் வசிக்கின்ற சரீரங்களை அவர் ஒருபோதும் புறக்கணியார்.*

*இவ்வுலக காரியங்களை குறித்ததான அதிக ஜாக்கிரதை ஒரு கிறிஸ்தவனுக்கு முற்றிலும் தகாது என்று அவர் நமக்கு தெரிவிக்கிறார். தற்காலத்திற்கென்று வாழ்வதே புறஜாதி வழக்கத்தின் சிறந்த பண்புகளில் ஒன்றாகும். புறஜாதியான் விரும்பினால், ஆர்வமுடையவனாய் இருக் கட்டும்: அவன் பரலோகத்தில் இருக்கிற பிதாவைக் குறித்து ஒன்றும் அறியான்; ஆனால், தெளிவான அறிவும் புத்தியும் உடைய கிறிஸ்தவன் தன்னுடைய விசுவாசம் மற்றும் மனத்திருப்தியினால் இதனை மெய்ப்பிக் கக்கடவன். நாம் நேசிக்கின்றவர்களை இழக்கும்போது, "நம்பிக்கை அற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கிக்கக்கூடாது" (1 தெசலோனிக் கேயர் 4:13). இந்த வாழ்க்கையைக் குறித்த அதிகமான கவலைகளினால் வருந்தும்போது, நாம் கடவுளற்றவர்களைப்போல அல்லது கிறிஸ்துவை அறியாதவர்களைப் போல நடந்துகொள்ள வேண்டாம்.*

*துக்கமான ஆவிக்கு எதிராக கிருபையுள்ள வாக்குத்தத்தை பரிகார மாக அவர் நமக்கு அருளுகிறார். நாம் தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய மகிமையையும் "முதலாவதாகவும், முதன்மையாகவும் தேடினால்," இவ்வுலகத்தில் நமக்குத் தேவையாய் இருக்கிற அனைத்தும் நமக்குக் கொடுக்கப்படும் என்று அவர் உறுதி அளிக்கிறார். நம்முடைய பரலோக ஆஸ்திக்கும் மேலாக இது "கூட்டப்படும்," "தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" (ரோமர் 8:28). "உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார்" (சங்கீதம் 84:11). கடைசியாக, ஞானமுள்ள நீதிமொழிகளில் ஒன்றை நிர்ணயிப்பதன் மூலம் இந்த பகுதியின் மீதான தன்னுடைய அனைத்துப் போதனை களையும் அவர் முத்திரையிடுகிறார். "நாளையதினம் தன்னுடையவைகளுக் காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும்." காரியங் கள் வரும்முன் நாம் அவைகளைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம்: இன்றைய காரியங்களை நாம் செய்து, நாளை விடியும்வரை நாளைக்கான கவலைகளை விட்டுவைப்போம். நாளையதினத்தைக் காணுமுன்பாக நாம் மரிக்கலாம்; நாளை என்ன நடக்கும் என்பதை நாம் அறியோம்; நாளையதினம் நமக்கு சிலுவையைக் கொண்டு வந்தால், அதை அனுமதித்தவர் அதைத் தாங்கிக்கொள்ளக்கூடிய கிருபையையும் நமக்கு அருள்வார் என்ற கருத்தில் மட்டும் நாம் உறுதியாய் இருக்கலாம்.*

*இந்த வேதப்பகுதி முழுவதும், பொன்னான பாடங்களின் பொக்கிஷ மாய் இருக்கிறது. நம்முடைய அநுதின வாழ்வில் அவைகளைப் பயன்படுத்த நாம் நாடுவோம். அவைகளை வாசிப்பதோடு மட்டும் நிறுத்தி விடாமல், அவைகளை நடைமுறைபடுத்துவோம். துக்கமும், அதிக ஜாக்கிரதையுமுள்ள ஆவியைக்குறித்து நாம் விழிப்புள்ளவர்களாய் இருந்து ஜெபிக்கக்கடவோம். இப்படிச் செய்வதினால் நாம் மகிழ்ச்சியாய்*

*இருக்கலாம். நம்முடைய பாதிப் பிரச்சனைகளுக்குக் காரணம், நமக்கு நேரிடக்கூடும் என்று எண்ணுகிற காரியங்களைக் குறித்து கற்பனை செய்வதே; மீதி பாதி, நமக்கு வருமென்று எதிர்பார்க்கிற காரியங்கள் நமக்கு நேரிடாமற் போவதினால் உண்டாகிறது. நம்முடைய விசுவாசம் எங்கே? நம்முடைய இரட்சகரின் வார்த்தைகளில் நமக்கு இருக்கின்ற நம்பிக்கை எங்கே? இந்த வசனங்களை வாசித்த பிறகு, நம்முடைய இருதயங்களை உற்று நோக்கினால், நம்மைப் பார்த்து நாமே வெட்கப்பட வேண்டும். "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" என்ற தாவீதின் வார்த்தைகள் மெய்யென்று நாம் நம்பலாம்.*

**(மத்தேயு ஏழாம் அதிகாரத்திற்கான ரைலின் விளக்கவுரை அடுத்த இதழில் வெளிவரும்.)**

"நியாயபிரமாணத்தின் பத்துக் கட்டளைகளை இகழ்வாகக் கருதுவதைக் குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சுவிசேஷத்தினால் இது ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறதென்றோ அல்லது கிறிஸ்தவர்கள் இதில் கற்றுக் கொள்வதற்கு ஒன்றுமில்லை என்றோ நாம் ஒரு கணம்கூட நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்து வின் வருகையானது பத்து கட்டளைகளின் நிலையை ஒரு மயிரளவுகூட மாற்றவில்லை. அப்படியானால், அது உயர்த்தப்பட்டு அதனுடைய அதிகாரம் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் **(ரோமர் 3:31)**."

"நியாயப்பிரமாணத் தின் பத்துகட்டளைகள் சரியானது எது, தவறு எது என்று விளக்கிக் காட்டுகின்ற கர்த்தரின் நித்திய அளவு கோலாய் இருக்கிறது. இதனால், பாவத்தைப் பற்றி அறிவையும்; கிறிஸ்துவின் தேவையின் அவசியத்தையும் ஆவியினாலே மனுஷர்களுக்கு வெளிப்படுத்தி, அவரிடம் அவர்களை வழிநடத்தவும், தம்முடைய ஜனங்களின் பரிசுத்த வாழ்விற்கும், அவைகளின் ஆளுமையும், வழிநடத்துதலும் அவசியம் என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணமானது "மகிமையுள்ள சுவிசேஷத்திற்கு" ஒப்பாய் இருக்கிறது. அது நம்மை மீட்காது, அதனால் நாம் நியாயந் தீர்க்கப்படோம். ஆனால், ஒருபோதும் நாம் அதை இகழ்வாகக் கருதக்கூடாது. நியாயப்பிரமாணமானது குறைவாக மதிப்பிடப்பட்டால், அது அறிவீனமான ஊழியத்தின் அடையாளமாகவும், ஆரோக்கியமற்ற சமய நிலைப்பாட்டைக் குறிப்பதாயும் இருக்கும். மெய்க் கிறிஸ்தவன் "தேவனுடைய நியாயப் பிரமாணத்தின்மேல் பிரியமாய் இருக்கிறான்." **(ரோமர் 7:22)**."

- ஜோன் சார்ள்ஸ் ரைல் -

# அரசியல் சுனாமி

வளர்ந்து வரும் ஆசிய நாடுகளில் ஒன்று மலேசியா. கடந்த இருபத்தைந்து வருடங்களில் மலேசியா பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து ஆசிய நாடுகளில் முக்கியநாடாக மலர்ந்து நிற்கிறது. மலாய் இனத்தாரும், சீனர்களும், இந்தியர்களுமாக மூன்று இனத்தார்கள் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். பார்வைக்கு வளர்ச்சியடைந்த நாடுபோல செல்வச் செழிப்போடு காணப்படும் மலேசியாவில் நெடுங்காலமாகவே இனப்பிரச்சனை நீருபூத்த நெருப்பாக இருந்து வந்திருக்கிறது. இருபது வருடங்களுக்கு மேல் மலேசியாவின் பிரதமராக இருந்த மகாதீர் மலாய் இனத்தவர்களுக்கே நாட்டில் முதலிடம் என்ற இனச்சார்புக் கொள்கை அடிப்படையில் செயலாற்றி மலாய் மக்களின் வாழ்க்கைத் தரம், பொருளாதாரம், அரசியல் செல்வாக்கு அனைத்தையும் உயர்த்தினார். அதேவேளை ஏனைய இனத்தவர்களுக்கு செய்ய வேண்டியதை அவர் செய்யவில்லை. இதனால் அதிகம் பாதிக்கப்பட்டது மலேசிய இந்திய சமுதாயமே. இந்தியர்கள் தொகை நாட்டில் குறைவடைந்தது மட்டுமல்லாமல் பொருளாதாரம் மற்றும் கல்வி, சமூக வளர்ச்சியில் அவர்கள் அதிகம் பாதிப்படைந்தனர். செல்வச் செழிப்புள்ள மலேசிய இந்தியர்களில் பலர் நாட்டைவிட்டுப் போய்விட வளம் குன்றியவர்கள் சொந்த நாட்டிலேயே இருந்து இரண்டாந்தர நிலையில் வாழ்ந்து வர நேரிட்டது. அவர்களை அரசியலில் பிரதிநிதித் துவப்படுத்தியவர்களும் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான எதையும் செய்யவில்லை.

நாட்டின் ஜனத்தொகையில் இரண்டாம் இடத்தை வகிக்கும் சீனர்களும் ஒருவிதத்தில் நாட்டரசியலால் பாதிக்கப்பட்டு ஜனத்தொகையில் குறைவடைந்தபோதும் தொடர்ந்தும் பொருளாதார செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், ஜனத்தொகையில் மூன்றாம் இடத்தை வகிக்கும் இந்தியர்களின் நிலையோ மிகவும் மோசமான இடத்தில் இருக்கின்றது. மகாதீர் பிரதமராக இருக்கும்வரை தனக்கெதிரான எந்தவிதமான அதிருப்தியையும் இரும்புக்கரம் கொண்டு அடக்கியிருந்தார். மிகவும் கடுமையான சட்டங்களின் மூலம் அதிருப்தியாளர்களை சிறையில் தள்ளி நீதி கிடைக்க முடியாதவகையில் செயல்பட்டார். தன்னுடைய துணைப் பிரதமராக இருந்த அன்வார் இப்ராகிமோடிருந்த உறவில் விரிசல் ஏற்பட்டபோது அவரை சிறையில் தள்ளி பெருந்துன்பமடைய வைத்தார். மகாதீருக்கு எதிராக நடக்க நாட்டில் எல்லோரும் தயங்கினர். மகாதீர் தொடர்ந்தும் இனிப் பிரதமராக இருக்கப்போவதில்லை என்று தீர்மானித்து நான்கு வருடங்களுக்கு முன் பதவி விலகியபோது அப்துல்லா படாவி பதவிக்கு வந்தார். மகாதீரும், அப்துல்லாவும் அம்னோ என்ற கட்சியைச் சேர்ந்தவர்கள். மலாய் இனத்தவரை முதன்மைப்படுத்தும் இந்த

அம்னோ கட்சியே நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து ஆண்டு வந்தது. எதிர்க்கட்சிகள் எப்போதும் பலமற்ற நிலையிலேயே இருந்து வந்தன.

அப்துல்லாவே இப்போதும் நாட்டின் பிரதமராக இருக்கிறார். அப்துல்லா பதவிக்கு வந்ததும் அதிருப்தியோடு வாழ்ந்து வந்த இந்தியர்கள் குரலுயர்த்த ஆரம்பித்தனர். அத்தோடு இப்ராகிம் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர் மேலிருந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் முழுதாக மீளப்பெறப்பட்டன. இந்திய அதிருப்தியாளர்கள் பெருங்கூட்டங்கள் போட்டு தங்களுடைய அதிருப்தியை தெரிவிக்குமளவுக்கு அப்துல்லாவின் ஆட்சியில் அவர்களுக்கு துணிவேற்பட்டது. அத்தோடு சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட இப்ராகிமின் உழைப்பால் பலவீனமாகவும், ஒற்றுமையில்லாமலும் செயல்பட்டு வந்த எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து உழைக்க ஆரம்பித்தன. அரசுக்கே வாக்களித்து வந்திருந்த இந்தியர்களும் தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய சாமிவேலுவின் இந்திய காங்கிரஸ் கட்சியை விட்டுவிட்டு ஏனைய எதிர்க்கட்சிகளை நாட ஆரம்பித்தனர். இந்த வருடம் மலேசியாவில் நிகழ்ந்த பாராளுமன்றத் தேர்தலில் இதெல்லாம் "அரசியல் சுனாமி" என்று அரசியல் விமர்சகர்களால் அழைக்கப்படும்படி பெருமளவுக்கு மாற்றத்தைக் கொண்டுவந்தது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைக் கொண்டிருந்த அம்னோ கட்சி சாதாரண பெரும்பான்மையை மட்டுமே அடைய முடிந்தது. அதன் மந்திரிகளில் பலராலும் தங்களுடைய தொகுதிகளைக் காத்துக்கொள்ள முடியவில்லை. நாடு சுதந்திரமடைந்து எக்காலமும் இல்லாதவகையில் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் 83 இடங்களைப் பிடித்தன. அதுமட்டுமல்லாமல் நாட்டின் பதின்மூன்று மாநிலங்களில் ஐந்து மாநிலங்களை எதிர்க்கட்சிகள் முதன்முறையாக கைப்பற்றி அங்கே ஆட்சி அமைக்கும் உரிமையைப் பெற்றன. இந்த ஐந்து மாநிலங்களில் இரண்டு செல்வச் செழிப்புள்ள மாநிலங்களாகும். அம்னோ கட்சியை அதிர வைத்த அரசியல் மாற்றங்களாகும் இவை.

இதெல்லாம் எதற்கு அத்திவாரமாக அமையப் போகின்றன என்பதை சிந்தித்துப் பார்ப்பது அவசியம். மலேசியா மலாய் இனத்தவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைத் தடைசெய்திருக்கிறது. சீனர்களும், இந்தியர்களும் மட்டுமே சுவிசேஷத்தை பகிரங்கமாகக் கேட்க முடியும்; விசுவாசிக்க முடியும். அதுமட்டுமல்லாமல் சீனர்களும், இந்தியர்களும் மலேசியாவில் சுவிசேஷ ஊழியத்தைச் செய்யவும், கர்த்தரை ஆராதிக்கவும் முழுச்சுதந்திரத்தைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பல தொல்லை களை அடிக்கடி சந்திக்க நேர்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சுனாமி இந்திய சமுதாயத்துக்கு பொருளாதார, சமூக விடுதலையைக் கொண்டுவருமா? சுவிசேஷம் தடையில்லாமல் பிரசங்கிக்கப்படவும், தடைகள் நீங்கவும் இடம் வகுக்குமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எதுவாக இருந்தாலும் நாடுகளுக்கெல்லாம் சொந்தக்காரரான கர்த்தர் அந்த நாட்டில் நிலைமையை மாற்றி அமைத்திருக்கிறார். ஐம்பது வருட காலமாக இருந்துவந்த ஒரே கட்சி அதிகாரத்தையும், இனத்தின் அடிப்படையில் நிகழ்ந்து வந்த அரசியல் பொருளாதார நடவடிக்கை

*களையும் தொடர வழியில்லாதபடி இந்தத் தேர்தல் முடிவுகள் அமைய கர்த்தர் வழிவகுத்திருக்கிறார். அம்னோ கட்சியும், அரசும் தேர்தல் முடிவுகள் தங்களுக்கு சார்பாக வர என்னென்னவோ செய்தும் அதையெல்லாம் கர்த்தர் தகர்த்து நாட்டு மக்கள் மூச்சுவிட இடம் கொடுத்திருக்கிறார். மியான்மாரின் இராணுவ ஜெனரல்களாலும், ஜிம்பாப்வேயின் முகாபேயாலும் அந்நாடுகள் சீரழிந்துகொண்டிருக்க அமைதியான அரசியல் புரட்சியை மலேசியாவில் கர்த்தர் அனுமதித்திருக்கிறார். ஆளுகிறவர்களும், எதிர்க்கட்சிகளும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் இனி நாட்டின் எதிர்காலம் எல்லா இனத்தவர்களுக்குமே நல்லதாக அமையலாம்.*

*வெறும் பொருளாதார, சமுதாய மாற்றங்களை மட்டும் எதிர்பார்த்து உலக நாடுகள் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஆத்மீக விடுதலையை எண்ணிப்பார்க்காமலும், படைத்தவரை மதிக்காமலும், சக மனிதனின் நலனில் அக்கறை காட்டாமலும் இருப்பதையே மனிதர்கள் எல்லா நாடுகளிலும் வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்டிருக்கின்றனர். இயேசு கிறிஸ்து தன்னுடைய சுவிசேஷத்தின் மூலம் தரும் ஆத்மீக விடுதலையைத் தர வேறெதுவும் மனிதனுக்கு நிரந்தர விடுதலை தர முடியாது. கர்த்தரின் வேதம் அறைகூவி அறிவிக்கும் இந்த செய்தியில் மனித இதயங்கள் அக்கறை காட்டாதவரையில் நாடுகள் சமாதானமாக இருக்க முடியாது. இனங்களுக்கிடையில் ஒற்றுமை இருக்காது. மலேசியாவில் ஏற்பட்டிருக்கும் “அரசியல் சுனாமி”க்கு அடிப்படைக் காரணம் அரசாங்கங்களை நியமிக்கும் சர்வவல்லவரான கர்த்தரே. அவருடைய சுவிசேஷம் மலேசியாவுக்கு விடுதலையைக் கொண்டுவர ஜெபிப்போம்.*


# சிறப்புச் சலுகையில் நல்ல நூல்கள்

மூன்று நல்ல நூல்களை வாசகர்கள் சிறப்புச் சலுகையாக முப்பது ரூபாய் மட்டும் (ரூபாய் 30/-) நன்கொடை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

**பரிசுத்த வேதாகமம்**
**பிரசங்கம் ஏன்!**
**கிறிஸ்தவன் யார்!**

இந்த நூல்களை வாசகர்கள் கீழ்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**இவாஞ்சலிக்கள் பாப்திஸ்து சபை**
**57/2 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 600425**
**தொலைபேசி எண்: 9994181010**

# சீர்திருத்த கிறிஸ்தவ சத்தியங்களை விளக்கும் நூல்கள்

- சீர்திருத்த விசுவாசம்
- திருச்சபை சீர்திருத்தம்
- பரிசுத்த வேதாகமம்
- தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு (ஜேம்ஸ் அடம்ஸ்)
- கிறிஸ்தவன் யார் (அல்பர்ட். என். மார்டின்)
- கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)
- வேதாகமத்தை விளங்கிக் கொள்ளுவது எப்படி
- வியாக்கியானப் பிரசங்கம்
- ஏன் பிரசங்கம்!
- சுவிசேஷக் கோட்பாடும்,
  புதிய சுவிசேஷக் கோட்பாடும்,
- ஆதிசபையின் அற்புத வரங்கள் (ஜனவரி 2006)
- வில்லியம் கேரி (ஜனவரி 2006)
- பத்துக் கட்டளைகள் (ஜூன் 2006)
- சார்ள்ஸ் ஹெடன் ஸ்பர்ஜன் (ஜூன் 2006)

நூல்களின் விலை மற்றும் தபால் செலவுபற்றிய விபரங்களுக்கு கீழ்வரும் முகவரிகளோடு தொலேபேசி மூலமோ எழுதியோ தொடர்புகொள்ளுங்கள்.

**இவாஞ்சேலிக்கள் பாப்திஸ்து சபை**
**57/2 டி. பி. கே மெயின் வீதி பைகாரா, மதுரை 625004**
**தமிழ்நாடு, இந்தியா**
**தொலைபேசி எண்: 9994181010**

**கிருபை இலக்கிய சேவை**
**19. இராஜசிங்க வீதி, கொழும்பு 6**
**ஸ்ரீ லங்கா**
**தெலைபேசி எண்:**

# வேத வெளிச்சமில்லாமல் வேதப் பிரசங்கமா!

பிரசங்கம் அல்லது தேவனுடைய செய்தியை அளிப்பது என்பது சாதாரணமான காரியமல்ல. கர்த்தர் தன்னுடைய சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்த ஏற்படுத்தியிருக்கும் கருவி பிரசங்கம். "பிரசங்கிக்க ஒருவன் இல்லாவிட்டால் அவர்கள் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" என்று ரோமர் 10ல் தேவ செய்தியை அளிப்பதற்கு அவசியமான பிரசங்கத்தினதும், பிரசங்கியினதும் அவசியத்தைப் பவுல் வலியுறுத்துகிறார். இத்தனை முக்கியமான பிரசங்கம் இன்றைக்கு தமிழினத்தில் தலைகீழான நிலையில், வேத போதனையில்லாமல், ஆவியின் வல்லமையில்லாமல், மனுஷத்தனத்தின் அங்க அடையாளங்களை மட்டும் கொண்டு இருந்து வருவது எனக்கு பெரும் மனவருத்தத்தை அளிக்கிறது. உலகம் முழுவதும் பல இடங்களில் இத்தகைய நிலைமை இருந்துவருவதை மறுக்க முடியாது. சமீபத்தில் நான் என் மனைவியோடு ஆஸ்திரேலியா நாட்டிற்கு விடுமுறையில் போயிருந்தபோது அங்கே ஓய்வு நாளில் ஒரு சபையில் ஆராதனைக்குப் போயிருந்தேன். ஆராதனையின்போது பிரசங்கமளித்த போதகர் லூக்கா சுவிசேஷ நூலில் இருந்து ஒரு வசனத்தை செய்தி அளிப்பதற்காக தெரிந்துகொண்டு பிரசங்கமளித்தார். அவர் பிரசங்கிப்பதற்கு எடுத்துக்கொண்ட வசனம் லூக்கா 24:39 "நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள்" என்பது. இந்த வசனத்தில் காணப்படும் வார்த்தையான "என் கால்களையும்" என்ற பதத்தைப் பயன்படுத்தி "இயேசுவின் கால்கள்" என்ற தலைப்பில், இயேசுவின் கால்கள் என்ற பதங்கள் காணப்படும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகளை எடுத்து அவை பற்றிய பத்து ஆத்மீக விஷயங்களை செய்தியாகப் பிரசங்கித்தார். அதாவது, லூக்கா 24:39ல் காணப்படும் "இயேசுவின் கால்கள்" என்ற பதங்கள் விசுவாசிகளுக்கு இயேசு ஆறுதலைத் தருகிறவராக இருக்கிறார் என்ற ஆத்மீக உண்மையைத் தெரிவிப்பதாக இருக்கின்றது என்ற அடிப்படையில் ஏனைய பத்து விஷயங்களையும் விளக்கினார். பிரசங்கித்த மனிதர் நல்லவர்தான். ஆனால், தேவனுடைய வார்த்தையை எப்படிப் பிரசங்கிப்பது என்பதில் தேர்ந்தவராக எனக்குத் தெரியவில்லை. நல்ல பிரசங்கமொன்றைக் கேட்கும் ஆர்வத்தோடு அந்த சபைக்குப் போய்விட்டு பெரிய ஏமாற்றத்தோடு நான் வீடு திரும்பினேன்.

லூக்கா சுவிசேஷத்தில் இயேசு தன்னுடைய கைகளையும், கால்களையும் சீஷர்களுக்குக் காட்டியதற்குக் காரணம் மரித்து உயிர்த்தெழுந்து வந்திருந்த இயேசுவை அவர்கள் இவர் யாரோ என்று எண்ணிக் கலங்கி ஓர் ஆவியைக் காண்கிறதாக பயந்து நின்றதால்தான் என்பதை லூக்கா 24:37 தெளிவாக விளக்குகிறது. தன்னுடைய கைகளையும், கால்களையும் காட்டி தான்தான்

*இயேசு என்று சீஷர்களை நம்ப வைக்க இயேசு முயன்றார். மனிதனுக்கு கைகளும், கால்களும் இருப்பதுபோல் ஆவிகளுக்கு இராது என்று அவர்களுக்குப் புரிய வைப்பதற்காகத்தான் சீஷர்கள் தன்னைத் தொட்டுப்பார்க்கும்படி தன்னுடைய கைகளையும் கால்களையும் இயேசு காட்டினார். இதை லூக்கா 24 தெளிவாக விளக்குகிறது. நாம் வாசித்து விளங்கிக்கொள்ளும்படி இத்தனைத் தெளிவாக கர்த்தர் தன் வார்த்தையில், இயேசு தன் கைகளையும், கால்களையும் சீஷர்களுக்கு எதற்காகக் காட்டினார் என்று விளக்கியிருக்கும்போது அதைப் புரிந்துகொள்ளாமல் அல்லது உதாசீனப்படுத்திவிட்டு அந்தப் பதங்களுக்கு சாதாரண மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாத விதத்தில் ஆழமான வேறு பொருள் இருப்பதுபோல் நினைத்து விளக்கம் கொடுத்து அதற்கு ஆத்மீக விளக்கம் என்று பெயர் சூட்டுவது அடிமுட்டாள்தனம். இந்த அடிப் படையில்தான் இன்றைக்கு தமிழினத்துப் பிரசங்கிகளில் பெரும்பாலா னோர் வேதத்திற்கு விளக்கம் கொடுத்து வருகிறார்கள்.*

**இந்த விதத்தில் வேதத்தை வாசிப்பதாலும், அதற்கு விளக்கமளிப்பதாலும் ஏற்படும் ஆபத்து என்ன?**

*இப்படிப் பிரசங்கிப்பதன் மூலம் கர்த்தர் தன் வார்த்தையில் நாமறிந்துகொள்ளும் விதமாகத் தெளிவாகத் தந்திருக்கும் செய்தியைப் பிரசங்கிகள் தவிர்த்துவிடுகிறார்கள்; மறைத்துவிடுகிறார்கள். தெளிவாக விளக்கப்பட்டிருக்கும் ஒரு விஷயத்தை அது கொடுக்கப்பட்டிருக்கும் விதத்தில் விளங்கிக் கொள்ளாமல் அதற்குள் வேறு மறைபொருள் இருப்பதாக எண்ணி அதைத் தேடிப்பார்ப்பது மிகவும் ஆபத்தான செயல். இதனால் கர்த்தர் கொடுத்திருக்கும் செய்தியை நாம் அறிந்துகொள்ள முடியாமல் போவதோடு, பிரசங்கி ஜோடனை செய்து உருவாக்கிவிடும் போலிச் செய்தியைக் கர்த்தரின் செய்தியாக நாம் நம்பிவிடும் ஆபத்து ஏற்படுகின்றது. இந்த முறையில் ஒவ்வொரு வேத பகுதிக்கும் நேரடி விளக்கமளிக்காமல் அதற்கு இரகசிய செய்தியொன்று இருப்பதுபோல் பாவித்து போலி விளக்கங்களை அளித்து வரும்போது கர்த்தரின் சத்தியம் முழுவதுமாக மறைக்கப்படுகிறது. இந்த விதத்தில் கொடுக்கப்படும் பிரசங்கங்களைத் தொடர்ச்சியாக கேட்டுவருகிறவர்கள் கர்த்தரின் வேத அறிவில் வளர வழியில்லை. கர்த்தரின் செய்தியை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. சத்தியத்தை அறிந்துகொள்ள முடியாமலும், அதில் வளர வழியில்லாமலும் விசுவாசத்தில் பிள்ளைப் பருவத்திலேயே அவர்கள் தொடர்ந்து இருந்துவருவார்கள். இத்தகைய பிரசங்கங்கள் இருந்து வரும் சபையில் ஆத்துமாக்கள் வேத அறிவில் வளர வழியீல்லை; சபை சத்தியத்தில் வளர முடியாது. இந்த விதத்தில் போதனைகள் அளிக்கப்படும் சபைகளில் சத்தியம் சத்தியமாக விளக்கப்படாதபடியால் அங்கே மெய்யான மனந்திரும்புதலும், ஆவிக்குரிய உயிர்த்துடிப்பும் இருப்பதற்கு வழியில்லை. சத்தியத்தை சத்தியமாகக் கேட்க முடிந்தால் மட்டுமே ஆவியானவர் நம் இருதயத்தில் கிரியை செய்யமுடியும். சத்தியம் மறைக்கப்படுகிறபோது ஆவியின் கிரியைகளுக்கு இடமிருக்க முடியாது.*

*ஆத்துமாக்கள் மனந்திரும்பும்படியாக ஆவியின் உணர்த்துதல் அவர்களுக்குள் ஏற்பட வேதம் தெளிவாக பிரசங்கிக்கப்பட வேண்டும். சத்தியம் மறைக்கப்பட்டு பிரசங்கியின் வார்த்தை ஜாலம் ஆதிக்கம் செலுத்தும்போது ஆத்துமாக்கள் ஆத்மீக மனந்திரும்புதலை அடைவதற்கு வாய்ப்பில்லை.*

*இந்தவிதமாக வேதத்திற்கு விளக்கமளிக்கும் முறை சபை வரலாற்றில் ஆறாம் நூற்றாண்டுப் பகுதியிலிருந்து இருந்துவந்திருக்கிறது. இந்த முறைக்கு உருவகப்படுத்துதல் என்று பெயர். அதாவது தெளிவான ஒரு விஷயத்தை, அதற்குள் வேறு ஏதோ மறைபொருள் இருப்பதுபோல் பாவித்து அதற்கு ஆத்மீக விளக்கமளிப்பதே இந்தத் தவறான முறை* (Allegorical interpretation or Spiritualizing)*. உதாரணத்திற்கு மத்தேயு 15:30, "அப்பொழுது, சப்பாணிகள், குருடர், ஊமையர், ஊனர் முதலிய அநேகரை, திரளான ஜனங்கள் கூட்டிக்கொண்டு இயேசுவினிடத்தில் வந்து, அவர்களை அவர் பாதத்திலே வைத்தார்கள்; அவர்களை அவர் சொஸ்தப்படுத்தினார்" என்று விளக்குகிறது. இந்த வசனம் நடந்த ஒரு விஷயத்தை விளக்குகிறது. வாழ்க்கையில் கடுந்துன்பங்களை அநுபவித்துக்கொண்டிருந்த அநேகரை ஜனங்கள் அழைத்து வந்து இயேசுவின் காலடியில் இருக்கும்படிச் செய்தார்கள் என்பது நடந்த விஷயம். இதற்குக் காரணம் இயேசு அவர்களைக் குணப்படுத்த வேண்டும் என்று ஜனங்கள் ஆசைப்பட்டதுதான். அதனால்தான் இயேசு அவர்களைக் குணப்படுத்தினார். இதைதான் அந்த வேதப்பகுதி விளக்குகிறது. இந்தப் பகுதி மூலம் நாம் அறிந்துகொள்ளும் உண்மை, இயேசு குணமளிக்கும் வல்லமையுடைய தேவனாக இருந்தார், தன் வாழ்நாளில் அநேகரைக் குணப்படுத்தியிருந்தார் என்பது மட்டுமே. இதற்குமேல் அந்த வசனம் வேறு எந்த மறைமுகமான ஆத்மீக செய்தியையும் கொண்டிருக்கவில்லை. அப்படியிருந்தால் அந்த வேதப்பகுதி அதை வெளிப்படுத்தியிருக்கும். இயேசுவின் பாதத்திற்கு இந்த வசனத்திலோ, வேதத்தில் ஏனைய பகுதிகளிலோ எந்தவிதமான விசேஷ அர்த்தமும் கொடுக்கப்படவில்லை. இதைவிட்டுவிட்டு அந்த வசனத்தில் காணப்படும் "இயேசுவின் பாதம்" குணப்படுத்தும் பாதம் என்றும், அது இயேசு குணப்படுத்தக்கூடியவராக இருந்தார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்றும் விளக்கமளித்தால் அது அதிகப்பிரசங்கித்தனம் மட்டுமல்ல அடிமுட்டாள்தனமும்கூட. இது கேட்பதற்கு அழகாக இருந்தாலும் சத்தியத்திற்கு காதும், மூக்கும், கண்ணும் வைத்து அதன் உருவமே தெரியாமல் சிதைத்துவிடும் முயற்சியாகும்.*

*இதேபோல் மத்தேயு 28:9ல், இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை சீஷர்களுக்கு அறிவிக்க ஸ்திரீகள் அவர்களைத் தேடிப்போனதை, "அவர்கள் அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்கப்போகிறபோது, இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார். அவர்கள் கிட்டவந்து, அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்துகொண்டார்கள்" என்று விளக்குகிறது. ஸ்திரீகளுக்கு இயேசு தரிசனம் தந்தபோது அவர்கள் அவருடைய பாதங்களில் விழுந்து அவரைப் பணிந்துகொண்டார்கள்*

*என்பதால் இந்த வசனத்தில் காணப்படும் "இயேசுவின் பாதங்கள்" இயேசு ஆராதனைக்குரியவர் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்று விளக்கந் தந்தால் எப்படியிருக்கும்? இயேசுவை மறுபடியும் சந்தித்த ஆனந்தத்திலும், அன்பிலும் உணர்ச்சிவசப்பட்டு அவர்கள் அவருடைய பாதங்களில் விழுந்து தழுவிக்கொண்டார்கள் என்பது மட்டுமே அந்த வசனம் தெரிவிக்கும் உண்மை. அதை மீறி அதற்கு ஆத்மீக அர்த்தம் கொடுக்க வேதம் எங்கே அதிகாரம் கொடுக்கிறது?*

*வேத வசனங்களை இந்த முறையில் உருவகப்படுத்தியும், ஆத்மீக அர்த்தம் கொடுத்தும் விளக்கமளிப்பதைப் பதினாறாம் நூற்றாண்டு சீர்திருத்த வாதிகள், மாட்டின் லூதர் உட்படக் கடுமையாக சாடினார்கள். வேத வார்த்தைகளுக்கும் போதனைகளுக்கும் ஒரே அர்த்தம் இருப்பதாகவும், அவற்றிற்குள் பல அர்த்தங்கள் இருப்பதாகப் பாவனை செய்து பொருள் கொடுப்பது அதிகப்பிரசங்கித்தனம் என்றும் மார்டின் லூதர் சொல்லியிருக்கிறார். ஒரு வேத பகுதியில் இருந்து பல பயன்பாடுகளைப்* (Applications) *பெற்றுக்கொள்ள முடியும்; ஆனால், பல அர்த்தங்கள்* (Meaning) *அதற்கு ஒருபோதும் இருக்க முடியாது. வசனங்கள் தெளிவாக ஒரு விஷயத்தை சொல்லும்போது அதன் பொருளை மாற்றி அதற்கு வேறு அர்த்தம் கொடுப்பது சத்தியத்தை சிதைக்கும் வேலையாகும். சத்தியம் இப்படிப் பிரசங்க மேடைகள் தோறும், சபைகள் தோறும் பிரசங்கிப்பவர்களால் சிதைக்கப்படும்போது ஆத்துமாக்கள் சத்தியத்தை அறிந்து கொள்ள முடியாமலும், ஆத்தும விருத்தியடைய முடியாமலும் போய்விடும். வேதம் ஆத்தும ஆதாயத்துக்காகக் கொடுக்கப்பட்டிருக்க அது பிரசங்கத்தில் சிதைக்கப்பட்டால் அந்தப் பிரசங்கத்தின் மூலம் எப்படி ஆத்துமாக்கள் ஆத்தும ஆதாயத்தை அடைய முடியும்? இந்தக் கொடுமையை நூற்றுக் கணக்கான தமிழ் பிரசங்கிகளும், ஊழியர்களும் கர்த்தரின் பெயரில் தமிழினத்தில் செய்து வருகிறார்கள்.*

**இந்தவிதமாக பிரசங்கிகள் விளக்கம் கொடுப்பதற்குக் காரணமென்ன?**

*தமிழினத்தில் இந்தவிதமாக போதனைகள் அளிக்கப்படுவதற்கு பிரசங்கிகள் அவசியமான பிரசங்கப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளாமல் வருவது முக்கிய காரணம். தமிழினத்து கிறிஸ்தவ சமுதாயத்தில் நடந்துவரும் பல ஆத்மீக ஊழல்கள் நல்ல பிரசங்கிகள் உருவாகத் தடையாக இருந்துவிடுகின்றன. முதலில், ஊழியங்கள் எல்லாம் குடிசைத் தொழில் போல் கேட்பாரின்றி, சரியான மேற்பார்வையின்றி ஆரம்பித்து விடுவதால் வேத இலக்கணங்களைக் கொண்டதாக இல்லாமல் ஆரம்பித்து அறைகுறை ஊழியங்களாக நடந்துவருகின்றன. இத்தகைய சொந்த ஊழியங் களைச் செய்து வரும் தனிநபர்கள் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர் களாகவும், ஊழியம் செய்வதற்கான எந்தப் பயிற்சியோ, பிரசங்கப் பயிற்சியோ பெற்றுக்கொண்டிராதவர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கு வேதத்தைத் தெளிவாகப் போதிக்கும் வல்லமையில்லாமல் இருக்கிறது. இரண்டாவதாக, தமிழினத்து இறையியல் கல்லூரிகள் பெரும்பாலும் லிபரல் போக்கில் போகின்ற அல்லது கெரிஸ்மெடிக் கோட்பாடுகளைப்*

*பின்பற்றுகின்றவையாக இருந்துவருவதால் அங்கே தெளிவான சத்தியப் போதனைகளைப் பெற்றுக்கொள்ளும் வழியில்லாமல் போய்விடுகின்றது. இவற்றில் இருந்து வெளிவருகிறவர்கள் கர்த்தரின் சத்தியத்தை வல்லமை யோடு போதிக்கும் எந்தத் தகுதியும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய காரணங்களால் தமிழினத்துக் கிறிஸ்தவம் நல்ல பிரசங்கிகளைக் காணமுடியாத வறண்ட பாலைவனமாகத் தொடர்ந்திருந்துவருகின்றது. தமிழினத்து டி.வியில் ஒவ்வொரு நாளும் காலையிலும், ஞாயிறு தினத்திலும் தேவ செய்தி என்ற பெயரில் செய்தி கொடுத்து வருகிற ஒவ்வொரு பிரசங்கி யின் செய்தியைக் கேட்டாலே சிந்திக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறவர் களுக்கு நான் சொல்வது தெளிவாக விளங்கும்.*

**இந்தவிதமாகத் தவறான ஆத்மீக விளக்கம் கொடுப்பதைத் தவிர்த்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

*1. பிரசங்க ஊழியத்தில் ஈடுபட்டிருக்கிற அனைவரும் முதலில் வேதத்தை மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதைப் படிக்கும்போதும், பயன்படுத்தும் போதும் மரியாதை கலந்த பயம் நம்மிருதயத்தில் இருக்க வேண்டும். இது இன்று அநேகருக்கு இல்லாமலிருக்கிறது. வேதம் ஏனைய நூல்களைப் போன்றதல்ல. அது சத்திய தேவனின் வசனம். நாமறிந்து கொள்ளும்படியாக அவர் தந்திருக்கும் அவருடைய சத்திய வழிகள். நாம் நிச்சயம் பின்பற்ற வேண்டிய, நமக்கு ஆத்மீக விருத்தியளிக்கக்கூடிய அவருடைய கற்பனைகள். அவற்றைக் கொண்டிருக்கும் வேதத்தை நாம் மனிதர்கள் எழுதியிருக்கும் சாதாரண நூல்களைப்போலக் கையாள முடியாது. பழைய ஏற்பாட்டில் தேவ மனிதனொருவனுக்கு கர்த்தர் செய்தியொன்றைக் கொடுத்து அதை எந்தவிதத்திலும் மீறி நடக்கக் கூடாதென்று சொல்லியனுப்பியிருந்தார் (1 இராஜாக்கள் 13:7-24). அவன் போகிற வழியில் இன்னொரு மனிதனின் பேச்சைக் கேட்டு கர்த்தரின் வார்த்தையை மீறி நடந்தான். அதனால் அவனை ஒரு சிங்கம் கொன்று போட்டது. இந்த சம்பவம் எதை விளக்குகிறது? கர்த்தருடைய வார்த்தையை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும், அவருடைய செய்தியை மீறி நடந்துகொள்வது ஆபத்து என்பதையும் காட்டுகிறது. கர்த்தரின் வார்த்தையை தேவ மனிதன் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாலும் அவனுடைய இருதயத்தில் பயம் இருக்கவில்லை. அவன் அதை அசட்டை செய்தான். அதற்கு எதிரான ஆலோசனையைக் கேட்பதற்கு தன்னுடைய இருதயத்தை அனுமதித்தான். கர்த்தரின் வார்த்தைக்கு எதிரான ஆலோசனையின்படி நடந்துகொண்டான். அதன் காரணமாகத்தான் கர்த்தர் சிங்கத்தைப் பயன்படுத்தி அவனைக் கொன்றார்.*

*கர்த்தரின் வேதத்தில் நாம் பயம் கலந்த மரியாதை வைத்திருந்தாலே அதை சரியாக விளங்கிக் கொள்ளும் முயற்சியில் அக்கறை காட்டுவோம். பயமில்லாத இருதயம் வேதத்தை அசட்டை செய்யும். பயமிருக்கும் இருதயம் அதன் செய்தியை சரியாக விளங்கிக் கொண்டு அதன் அதிகாரத்துக்குக் கட்டுப்படும். இன்றைக்கு வேதம் கர்த்தரின் வார்த்தை,*

அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தும் ஒரே நூல் என்ற எண்ணமே பெரும்பாலானவர்களுக்கு இல்லாமல் இருக்கின்றது. பாரம்பரியத்துக்கு காட்டுகிற மரியாதையையும், அக்கறையையும் ஒருவரும் வேதத்தில் காட்டுவதில்லை. அற்புதங்களுக்கும், அசட்டைக் கனவுகளுக்கும் தரும் இடத்தை வேதத்திற்குத் தருவதில்லை. தேவபயமறியாத இருதயங்கள் எப்படி தேவனுடைய வார்த்தைக்கு கட்டுப்படப் போகின்றன. கர்த்தரின் வேதத்துக்கு மதிப்புக்கொடுக்க எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டும். அதற்குப் பயந்து, மரியாதை தந்து, அது நம்மேல் ஆதிக்கம் செலுத்தும் வல்லமையுள்ள கர்த்தரின் வார்த்தை என்ற உண்மை நம்மிருதயத்தை விட்டு அகலாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இதுவே நாம் செய்ய வேண்டிய முதல் காரியம்.

2. வேதத்தை அன்றாடம் வாசித்து அதன் நூல்கள் அனைத்திலும் நல்ல பரிச்சயம் ஏற்பட வேண்டும். இன்று அநேகருக்கு வேதத்தில் பொதுவான அறிவுகூட இல்லாமலிருக்கிறது. ஒவ்வொரு நூலையும் வாசித்து வேத நூல்கள் அனைத்தும் நமக்கு தெரிந்திருக்க வேண்டும். பலர் புரிந்து கொள்ளக் கஷ்டமான நூல்கள் என்ற எண்ணத்தில் சில நூல்களின் பக்கம் தலை காட்டுவதில்லை. சாகும்வரைகூட அவர்கள் அவற்றைத் தொட்டிருக்க மாட்டார்கள். சகல வேத நூல்களையும் நாம் வாசிப்பதற்காக அவற்றை விளங்கிக்கொள்ளக்கூடிய முறையிலேயே கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார். ஒரு நூலைப் பல தடவை வாசித்துப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டால் ஆரம்பத்தில் விளங்காதிருப்பதுபோல் காணப்படும் நூல்களில் நமக்கு நல்ல பரிச்சயம் ஏற்படும். திரும்பத்திரும்ப, அன்றாடம் அதனை வாசிக்க வேண்டும். நேரத்தை மீதப்படுத்தி ஒவ்வொரு நூலையும் பல தடவைகள் வாசிக்க வேண்டும். இதற்கு நேரம் தேவைதான். அதற்கான நேரத்தை நாம் ஒதுக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பஸ், டிரெயின் பிரயாணம், ஆபீஸில் மதிய உணவு நேரம் என்று எங்கு எத்தனை நேரம் கிடைக்கின்றதோ அதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேதத்தில் பாண்டித்தியம் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு படிக்காமல், அதன் மூலம் கர்த்தர் நம்மோடு பேசுகிறார், அதை வாசிக்காமல் அவரோடு நமக்கு நல்லுறவு இருக்க முடியாது என்ற ஆத்மீக உணர்வுகளோடு அதைப் படிக்க வேண்டும். வேதத்தை வாசிக்க வாசிக்க அவரோடு நமக்கு அந்நியோந்யமும், அநுபவபூர்வமான உறவும் இருக்கும்; வளரும். ஒரு காலத்தில் விசுவாசிகளும், போதகர்களும் எங்கு போனாலும் வேதத்தைக் கையில் வைத்திருந்தார்கள். இன்றைக்கு அதை சபைக்குக் கொண்டுவருகிறவர்கள்கூட குறைந்துகொண்டு வருகிறார்கள். அந்தளவுக்கு வேதம் நம் வாழ்வில் இரண்டாம் இடத்தைப் பிடிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். கர்த்தரை நேசிக்கிறவன் வேதத்தை நேசிப்பான். மனைவியை நேசிக்கிற கணவன் பாக்கெட் பர்சில் அவளுடைய போட்டோவை வைத்திருக்கிறான். நாம் நேசிக்கின்ற எதுவும் நம்மனதில் ஒவ்வொரு நிமிடமும் வந்துபோவதில்லையா? நாம் நேசிக்கின்ற கர்த்தரின் வேதம் ஏன் நம் வாழ்வில் இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது?

*3. கர்த்தரின் வார்த்தையை முறையாகக் கற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட வேண்டும். அதை முறையாகக் கற்றுக்கொள்ள என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையையும் செய்ய வேண்டும். வேதத்தின் பொதுவான போதனைகளை எந்த விசுவாசியும் தன்னுடைய சொந்த மொழியில் வாசித்து விளங்கிக் கொள்ள முடியும். அதற்கு அவன் பண்டிதனாக இருக்க வேண்டியதில்லை. வேதத்தை மற்றவர்களுக்கு போதிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறவர்கள் அதற்கு ஒருபடி மேலே போய் உழைத்துப் படிக்க வேண்டிய கடமைப் பொறுப்பைக் கொண்டிருக் கிறார்கள். அதனால்தான் யாக்கோபு, "அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று (3:1) சொல்லியிருக்கிறார். போதிக்கப் போகிறவர்கள் "போதக சமர்த்தர் களாக (அதில் அதிக ஞானமும், திறமையும் கொண்டவர்களாக) இருக்க வேண்டும் என்று பவுல் (1 தீமோ. 3:2) கூறுகிறார். போதிக்கும் பொறுப்பைப் பெற்றுக்கொண்டிருந்த தீமோத்தேயுவைப் பார்த்து பவுல், "நீ வெட்கப் படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும் படி ஜாக்கிரதையாயிரு" என்று கூறியிருக்கிறார் (2 தீமோ. 2:15). "நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" என்று தீமோத்தேயுவுக்கு அறிவுறுத்துகிறார் (2 தீமோ. 3:14). வேதத்தை தீமோத்தேயு நன்றாகக் கற்றுக் கொண்டிருந்தார். அதை பகுத்துப் போதிக்கத் தேவையான அனைத்தையும் அடைந்திருந்தார். அப்போஸ்தலன் பவுலிடம் இருந்து அந்தளவுக்குப் பயிற்சி பெற்றிருந்தார். இதேவிதமாக வேதத்தைப் போதிக்கும் பொறுப்பைக் கொண்டிருப்பவர்களும், அந்தப் பணிக்குத் தயார் செய்துகொண்டிருப்ப வர்களும் வேதத்தில் அதிகத் தேர்ச்சி அடைய வேண்டும். கடுமையாக உழைத்துப் படித்து வேத அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. வேத விளக்க விதிகளை அறிந்துகொண்டு அவற்றை முறையாகப் பயன்படுத்திக் கர்த்தரின் வார்த்தையை விளங்கிக் கொள்ள வேண்டும்; விளக்கமளிக்க வேண்டும். கர்த்தரின் வேதம் ஓர் இலக்கியப் பொக்கிஷம். அது பொதுவாக எந்த எழுத்துக்கும், இலக்கியத்துக்கும் இருக்கின்ற அத்தனை அம்சங்களையும் கொண்டிருக்கின்றது. அதாவது அது இலக்கண பூர்வமாக நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இலக்கணமில்லாத மொழியில்லை. மொழியைப் புரிந்துகொள்ள அதன் இலக்கணம் உதவுகிறது. அதேபோல் வேதத்தைப் புரிந்துகொள்ள அது எழுதப்பட்டிருக்கும் மொழி இலக்கணம் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அத்தோடு, வேதத்தில் வரலாற்றையும், தீர்க்கதரிசனங்களையும், கவிதை நடை இலக்கியத்தையும், வசனநடை இலக்கியத்தையும், உருவக, உவமை, பழமொழி இலக்கியங்களையும் பார்க்கிறோம். இலக்கியத்தின் பல அம்சங்களையும், தன்னுடைய செய்தியை விளக்குவதற்கு வேதத்தில் கர்த்தர் பயன்படுத்தியிருக்கிறார். அவற்றை நாம் அலட்சியப்படுத்த முடியாது. இந்த ஒவ்வொரு இலக்கியத்தையும் அதற்குரிய சிறப்பான அம்சங்களை மனதில் வைத்துப் படிக்க வேண்டும்; ஆராய்ந்து விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு நமக்குத் துணைசெய்யும் விதிகளே வேத விளக்க விதிகள்* (Principles of

interpretation). இந்த வேத விளக்க விதிகளை முறையாகப் பயன்படுத்திப் படிக்கத் தவறுவதனாலேயே வேத வசனங்களுக்கு தங்கள் மனம் போன போக்கில் பலர் ஆத்மீக விளக்கம் என்ற பெயரில் அறிவுக்குப் பொருந்தாத விளக்கங்களைத் தந்து வருகிறார்கள். லூக்கா 24:39ல் இயேசு தன்னுடைய கைகளையும் கால்களையும் சீஷர்களுக்குக் காண்பித்தபோது அவை அவருடைய கைகளாகவும், கால்களாகவும் மட்டுந்தான் இருந்தன. சாதாரண அன்றாட செய்திப் பத்திரிக்கைகளையும், ஏனைய உலக இலக்கியங்களையும் வாசிக்கிறபோதுகூட இந்த வகையிலான மொழி நடையை உள்ளது உள்ளபடியேதான் நாம் எடுத்துக்கொள்ளுவோம். அதற்குள் மறைபொருளான போதனைகள் இருப்பதாக நாம் எண்ணுவதில்லை. வேத விளக்க விதிகளை அறிந்துகொண்டிருப்பவர்கள் இயேசுவின் கால்களுக்கு ஆத்மீகப் பொருள் கொடுக்க முனைவதைத் தவிர்த்துக் கொள்ளுவார்கள். வேதம் ஆத்மீகப் போதனைகளால் நிரம்பி வழிகின்றது. அந்தப் போதனைகளை மொழிகளுக்குரிய இலக்கண, இலக்கிய கட்டுப்பாடுகளைப் பின்பற்றி வேதத்தைப் படிக்காமல் ஒருபோதும் விளங்கிக் கொள்ள முடியாது. மொழிகளுக்கேயுரிய இலக்கண, இலக்கியக் கட்டுப்பாடுகளை மீறுகிறபோது கர்த்தரின் போதனை சிதைக்கப்பட்டு விடும். நம்முடைய சொந்தக் கருத்துகளை நாம் வேதமாக நம்பிவிடக்கூடிய ஆபத்து ஏற்படும்.

வேத விளக்க விதிகள் வேதத்திலேயே தரப்பட்டிருக்கின்றன. அவற்றை இன்றைய பிரசங்கிகள் சரிவர அறிந்திருக்கவில்லை. வேதத்தைப் படிக்கவும், விளக்கவும் இதெல்லாம் அவசியமில்லை, ஆவியானவர் மட்டுமே போதும் என்று அவர்கள் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விதிகளை வேதத்தில் தந்திருப்பதே கர்த்தர்தான். அந்த விதிகளைப் பயன்படுத்தி வேதத்தைப் படிப்பதைத் தவிர்த்தால் திரித்துவத்தின் மூன்றாம் ஆள்தத்துவமான ஆவியானவர் நமக்கு எப்படி உதவுவார்? வேதத்தின் போதனைகளை நமக்கு உணர்த்தும் பணியை ஆவியானவர் செய்கிறார். வேதத்தை விளங்கிக் கொள்ளுவதில் அசட்டை காட்டி அதைக் குளறுபடியாக பிரசங்கித்தால் ஆவியானவர் நம் பக்கம் எப்படி வருவார்? வேத விளக்க விதிகளைக் கற்றுக்கொண்டு கவனத்தோடு வேதத்தைக் கற்றுக்கொள்ளும்போது அநாவசியத்துக்கும் வேத வசனங்களை நீங்கள் உருவகப்படுத்த மாட்டீர்கள்; அவற்றிற்கு தேவையில்லாமல் ஆத்மீக அர்த்தம் கற்பிக்க மாட்டீர்கள். இந்த வேத விளக்க விதிகளை இங்கே சுருக்கமாகத் தருகிறேன்:

**நான்கு அடிப்படை வேத விளக்க விதிகள்:**

1. வேத வசனங்களை அவை கொடுக்கப்பட்டிருக்கின்ற மொழிநடையையும், இலக்கியத் தன்மையையும் கவனத்தில் கொண்டு இலக்கண அடிப்படையில் ஆராய்ந்து வசனங்களை உள்ளது உள்ளபடியே விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த விதியை விபரமாக ஒரு நூலளவுக்கு விளக்குவதற்கு அதில் விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இருந்தாலும் ஒரு சில உதாரணங்களைத் தந்து இதை விளக்க விரும்புகின்றேன். லூக்கா

*24:39ஐயே எடுத்துக் கொள்ளுவோம். “நான்தான் என்று அறியும்படி, என் கைகளையும் என் கால்களையும் பாருங்கள்” என்றார் இயேசு. இயேசு இங்கே சீஷர்களோடு பேசி இதைச் சொன்னார். ஏன், எதற்காக சொன்னார் என்பதையும் அந்த வசனம் அமைந்திருக்கும் பகுதி விளக்குகிறது. அவர் அப்படிச் சொன்ன பிறகு என்ன நடந்ததென்பதும் தெளிவாக விளக்கப் பட்டிருக்கிறது. சீஷர்கள் அவர் இயேசுதான் என்று நம்பியதை 52, 53ம் வசனங்கள் விளக்குகின்றன. முதலில், இந்தப் பகுதி எத்தகைய இலக்கியம் என்று கேட்போமானால் இது வசனநடையில் அமைந்துள்ள வரலாற்று இலக்கியம் என்பதை அறிந்துகொள்ளுகிறோம். அதாவது, நடந்து முடிந்த ஒரு சம்பவம் இங்கே விளக்கப்பட்டிருக்கிறது. இதில் உருவகத்திற்கோ, உவமைக்கோ இடமில்லை. இது ஒரு கவிதையும் அல்ல. இங்கே தீர்க்க தரிசனத்திற்கும் இடமில்லை. எனவே இந்த வரலாற்று இலக்கியப்பகுதியில் காணப்படும் இயேசுவின் வார்த்தைகளை அவர் சொல்லியிருக்கிறபடி, இலக்கண அர்த்தத்தின்படி மட்டுமே புரிந்துகொள்ள வேண்டும். இயேசு வின் கைகளுக்கும், கால்களுக்கும் எந்த விநோதமான விளக்கமும் கொடுக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை. இயேசு சீஷர்களை நம்ப வைப்பதற் காகத் தன்னைத் தொட்டுப்பாருங்கள் என்று கைகளையும், கால்களையும் காட்டினார் அவ்வளவுதான்.*

*இந்தப் பகுதியை வாசிக்கின்றவர்கள், இதிலிருந்து என்ன செய்தியை நாம் அறிந்துகொள்ளும்படி கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்ற கேள்வியை எதிர்நோக்குகிறபோதுதான் தவறு செய்யும் நிலை ஏற்படுகின்றது. சிலர், இந்தப் பகுதி தெளிவாக உள்ளதை உள்ளபடியே விளக்குவதால் இதில் கண்ணுக்குப் புலப்படாமல் ஏதாவது செய்தி இருக்கும் என்று எண்ணி அவர்கள் ஒரு விளக்கத்தைத் தர முயற்சிக்கிறார்கள். இந்தப்பகுதியில் நிச்சயம் போதனை இருக்கிறது. அது இயேசுவின் கைகளிலும், கால்களிலும் மறைந்திருக்கவில்லை. மாறாக முதலில், இந்தப்பகுதியை 24:36ல் வாசித்துப் பார்த்தால் அங்கு நடந்த சம்பவத்தின் முழு விபரத்தையும் அறிந்து கொள்ளலாம். அதற்குப் பிறகு இந்தப் பகுதி தரும் போதனை அதற் குள்ளேயே எப்போதும் இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில், இது உருவகமோ, உவமையோ, தீர்க்கதரிசனமோ அல்ல. இது வசனநடையில் எளிமையான வார்த்தைகளால் விளக்கப்பட்டிருக்கும் வரலாற்று சம்பவம். இனி இது தரும் போதனைதான் என்ன என்பதைக் கவனிப்போம். (1) மரித்து உயிர்த்தெழுந்த இயேசு தன்னுடைய சரீரத்தோடு, அதை மற்றவர்கள் தொட்டு உணரும்படியாக அதேநேரத்தில் மூடியிருக்கும் கதவைத் திறக்காமலேயே அறைக்குள் நுழையக்கூடிய உருவத்தில் பலருக்குக் காட்சியளித்திருக்கிறார். நம்முடைய உருவத்திற்கும் அன்று அவர்கொண்டிருந்த உருவத்திற்கும் இந்த வித்தியாசம் இருந்தது. பரலோகத்தில் நாம் இயேசுவை இப்படியாகப் பார்க்கக்கூடும் என்ற ஒரு நம்பிக்கையை அது அளிக்கிறது. அத்தோடு பரலோகம் போகிறவர்கள் ஒருவரையொருவர் இனங்காணக்கூடிய உருவத்தைக் கொண்டிருப்பார்கள் என்பதையும் இது காட்டுகிறது. இதற்கு மேல் அவருடைய உருவநிலை பற்றி நாம் கற்பனை செய்வது தவறு. (2) இயேசு மரித்தநாளில் இருந்து*

*கலங்கிப் போயிருந்த சீஷர்களை தைரியப்படுத்தி அவர்களுடைய கடமைப் பொறுப்பை உணர்த்தி ஊழியத்தில் ஊக்கப்படுத்த இயேசு அவர்களை சந்தித்தார். அந்தக் காரியம் இந்த சந்திப்பின் மூலம் நிறைவேறியதையும் பார்க்கிறோம். அவர் இயேசுதான் என்பதை சீஷர்கள் அவரோடு பேசிப் பழகியதில் இருந்து உணர்ந்து ஆனந்தப்பட்டு, கலக்கமெல்லாம் நீங்கி எருசலேமுக்குப் போனார்கள். இதிலிருந்து நாம் பொதுவாகப் படிக்கும் பாடம் நம்முடைய கலக்கங்களையும், சந்தேகங்களையும் நீக்கி நம்மைத் தைரியப்படுத்தும் ஆண்டவராக இயேசு இருக்கிறார் என்பதே. இதை வேதத்தின் ஏனைய பகுதிகளும் விளக்குகின்றன. (3) லூக்கா 24:36-53 வரை வாசித்துப் பார்த்தால், இயேசு அவர்களோடிருந்தபோது தன் உருவத்தை மட்டும்காட்டி அவர்களை நம்ப வைக்க அவர் பிரயாசப்படவில்லை; அதற்கும் மேலாக தான் இதுவரை போதித்திருந்த வேத வாக்கியங்களை அவர்கள் நினைவுகூரும்படி அவர் அவர்களுக்கு விளக்கிப் போதித்தார் (45). அதன் மூலம் அவர் அவர்களுடைய மனக்கதவைத் திறந்துவைத்தார். இதிலிருந்து பொதுவான பாடமாக வேதம் நம்முடைய ஆத்மீகக் கண் களைத் திறந்து வைக்கும் கர்த்தரின் சத்தியம் என்பதை அறிந்து கொள்ளுகிறோம். அற்புதங்களைவிட வேத சத்தியங்களே நமக்கு ஜீவனளிக்கக்கூடியவை, ஞானத்தைத் தரக்கூடியவை, கர்த்தரில் நம்மை வளர்க்கக்கூடியவை என்பதை இப்பகுதியில் இருந்து அறிந்து கொள்ளுகிறோம். இதுவே நாம் வேதத்தைப் படிக்கும்போது பயன் படுத்துகிற முறையாக இருக்க வேண்டும். பொதுவாக இந்தவிதத்தில்தான் நாம் வேதத்தின் பகுதிகளை ஆராய வேண்டும்; விளங்கிக் கொள்ள வேண்டும். ஆத்துமாக்கள் தன் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட வேண்டுமென்பதற்காக பலர் இல்லாததைச் சொல்லி சிந்திக்க முடியாதவர் களை ஏமாற்றுகிறார்கள். கர்த்தர் வேதத்தில் உள்ளதை உள்ளபடி விளங்கிக் கொள்ளும்படியாகவே நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.*

*2. எப்போதும் நாம் வாசிக்கின்ற வசனத்தை அது கொடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் வாசித்து அந்தப் பகுதிதரும் முழுவிபரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வசனத்தை மட்டும் எடுத்துக்கொண்டு அதில் செய்தி கொடுப்பது மிகவும் ஆபத்தான காரியம். ஒவ்வொரு வார்த்தையும், வசனமும் வேதத்தில் ஒரு பின்னணியைக் கொண்டு அமைந்திருக்கின்றன. லூக்கா 24:39ல் “இயேசுவின் கைகளும், கால்களும்” என்ற பதங்களை நாம் ஒருபோதும் அது அமைந்திருக்கும் சந்தர்ப்பத்தில் இருந்து அகற்றிவிட்டு விளங்கிக் கொள்ள முடியாது; விளக்கமளிக்க முடியாது. இதற்காக நாம் எப்போதும் ஒரு வசனத்தை விளக்கும்போது அதற்கு முன்னால் என்ன சொல்லப்பட்டிருக்கிறது, அந்த வசனத்திற்குப் பின்னால் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். சில வேளையில் ஒரு பகுதியை விளங்கிக் கொள்ள அது அமைந்திருக்கும் அதிகாரத்தையோ அல்லது முழு நூலையோ வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். வசனங்கள் அமைந்திருக்கும் சந்தர்ப்பம் மட்டுமே எந்தவொரு வசனத்தையும் நாம் விளங்கிக் கொள்ள உதவமுடியும்.*

*3. வேத வசனங்கள் உடனடி சந்தர்ப்பத்தை* (Immediate context) *மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்காமல் ஒரு நூலுக்குள்ளாக அமைந்து காணப்படுகின்றன* (Larger context)*. வசனமோ, வசனங்களோ காணப்படும் நூலின் ஆசிரியர், அது எழுதப்பட்ட நோக்கம், நூலின் வாசகர்கள், அவர்கள் எதிர்நோக்கியிருந்த பிரச்சனைகள், வாழ்ந்த சூழ்நிலை ஆகியவை நாம் எடுத்துக் கொண்டிருக்கும் வசனங்களின் பொருளை விளங்கிக் கொள்ளுவதற்கு பேருதவி செய்கின்றன. என்னுடைய சபையில் இப்போது நான் யாக்கோபு நூலில் இருந்து பிரசங்கமளித்துக் கொண்டிருக்கிறேன். அதை ஆரம்பித்தபோது அந்த நூலின் பின்னணி மற்றும் அதன் ஆசிரியரைப் பற்றி ஆரம்பத்தில் இரண்டு செய்திகளைத் தயாரித்து அளித்தேன். அந்த செய்திகள் முழுநூலின் தன்மையையும், போதனையையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவியதோடு இனிவரும் காலங்களில் ஒவ்வொரு அதிகாரத்திலும் தரப்பட்டிருக்கும் குறிப்பிட்ட போதனைகளைத் தெளிவாக நூலின் அடிப்படையில் முறையாக அணுகி விளங்கிக் கொள்ள பேருதவி செய்யும். வேதத்தின் எந்தவொரு வசனத்திற் கும் ஒரு சந்தர்ப்பம் உண்டு, பின்னணி உண்டு என்பதை மனதில் வைத்தே எப்போதும் வேதம் படிக்க வேண்டும். இந்த முறையில் தமிழினத்தில் வேதம் படிக்கிறவர்கள், போதிக்கிறவர்கள் குறைவு. பொதுவான வேத அறிவைப் பெற்றுக்கொள்ளாததாலும், இந்த முறையில் வேதத்தை அணுகும் முறையை வளர்த்துக்கொள்ளாததாலும் வெறுமனே ஒரு வசனத்தை மட்டும் எடுத்துப் பேசிக்கொண்டிருப்பது பலருக்கும் இன்று வழக்கமாகப் போய்விட்டது.*

*4. ஒரு வசனப்பகுதியை ஆராய்ந்து படித்து அதில் கொடுக்கப்பட்டிருக்கும் போதனை இதுதான் என்று அறிந்துகொண்ட பின் அந்தப் போதனை வேதத்தின் ஏனைய நூல்களில் எந்தமுறையில் விளக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேதத்தில் உள்ள நூல்களனைத் தும் பிரிக்க முடியாதபடி ஒன்றோடொன்று இணைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு நூலுக்கும் ஏனைய நூல்களோடு தொடர்பிருக்கின்றது. ஆரம்பத்தில் இருந்து வேதம் ஒரே செய்தியை படிமுறையாக விளக்கி வெளிப்படுத்தல் நூலில் நிறைவுக்குக் கொண்டுவருகிறது* (Progressive revelation)*. அது வேதத்தின் விசேஷ அம்சம். இதனால், எந்த வேதப்பகுதியில் இருந்தும் இதுதான் போதனை என்று நாம் தீர்மானித்து விடுமுன்பு அத்தகைய போதனை தெளிவாக வேதத்தின் ஏனைய பகுதிகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்டிருந்தால் மட்டுமே நாம் தீர்மானித்திருக்கின்ற போதனை வேத போதனையாக இருக்க முடியும். பல வேதப்பகுதிகளின் மூலம் நிரூபிக்கப்படுகின்ற ஒரு போதனை மிகவும் வலிமையானதாக இருக்கும்; கர்த்தரின் சத்தியமாக இருக்கும். இதன் காரணமாக வேதத்தை ஒப்பிட்டுப் படிக்கும் வழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*இதற்கு ஓர் உதாரணத்தை விளக்க விரும்புகிறேன். தமிழகத்தில் சமீபத்தில் ஒரு பிரசங்கி டி. வியில் நோவாவின் குமாரன் அவரோடு*

*தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டதாக ஆதி. 9:20-27ஐ வைத்து விளக்க மளித்திருக்கிறார். இந்த உதாரணம் கொஞ்சம் அதிகமானதுதான். இருந்தாலும் எந்தளவுக்கு வேத அறிவில்லாமல் டி.வியில் உளறுமளவுக்கு பிரசங்கிகள் தமிழினத்தில் வளர்ந்திருக்கிறார்கள் என்பதை விளக்க இந்த உதாரணத்தைத் தருகிறேன். இந்த ஆதியாகமப் பகுதியை பிரசங்கித்த மனிதர் சரியாக வாசித்து விளங்கிக் கொள்ளவில்லை. அந்தப் பகுதியில் அப்படியான எந்த அசிங்கமான விபரமும் நோவாவைப் பற்றிக் கொடுக்கப்படவில்லை. நோவா செய்த தவறு அதிகமாகக் குடித்ததும், அலங்கோலமாக விழுந்து கிடந்ததும்தான். அதைத்தவிர இந்தப் பகுதி நோவாவின் மீது எந்தக் குறையையும் சொல்லவில்லை. நோவாவின் குமாரனான காம் தகப்பன் நிர்வாணமாக இருப்பதைப் பார்த்துவிட்டு அதைப்போய் சகோதர்களுக்கு மரியாதையற்ற முறையில் சொல்லி யிருக்கிறான். இந்த இடத்தில் நோவா சபிக்குமளவுக்கு காம் செய்த பாவம் தகப்பனை இழிவுபடுத்திப் பேசியது தான். மற்ற இரு சகோதரர்களும் உடனடியாக ஒரு பெரிய போர்வையோடு போய் தகப்பனைக் கண்களால் பார்க்காமலேயே அவர் மேல் போர்வையைப் போர்த்திவிட்டு வெளியில் போனார்கள். அந்தளவுக்கு தகப்பனை அவர்கள் மதித்து நடந்து கொண்டார்கள். இந்த இடத்தில் தகப்பனோடு தவறான சரீர உறவு கொண்டான் நோவாவின் குமாரன் என்று எப்படி ஒரு மனிதனால் பகிரங்கமாக விளக்கம் கொடுக்க முடிந்தது என்பது புரியவில்லை. அப்படி ஒரு முடிவெடுத்த பிரசங்கி, நோவா போன்ற தீர்க்கதரிசியாக, தேவ மனிதனாக இருக்கிற மனிதர்கள் அத்தகைய கொடூர பாவத்தை செய்வார்களா? அப்படி வேதம் வேறு எந்தப் பகுதியிலாவது, எங்காவது போதிக்கிறதா? என்பதையும் சிந்தித்துப் பார்க்கவில்லை. நோவாவைப் பற்றிய தவறான எண்ணத்திற்கு இந்த மனிதர் வந்த காரணம் ஆதி. 9ஐ சரியாக வாசிக்காததாலும், அதை ஏனைய வேதப்பகுதிகளோடு ஒப்பிட்டு வாசித்து ஆராயாததாலுமே.*

*வேத வெளிச்சமில்லாமல் வேதப் பிரசங்கமா! என்ற தலைப்பை ஏன் கொடுத்திருக்கிறேன் என்று உங்களுக்கு இப்பொழுது புரிகிறதா? வேதப் பஞ்சம் பலரையும் இன்று உளரல் மன்னர்களாக்கி ஆத்துமாக்களின் அறியாமையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வழிவகுத்திருக்கிறது. இந்த ஆக்கத்தை வாசிக்கும் பிரசங்கின்ற பொறுப்பைக் கொண்டிருப்பவர்களும், பிரசங்கத்தைக் கேட்கும் ஆத்துமாக்களும் இனி வேதத்தைக் கையாளுகின்றபோது அது கர்த்தரின் சத்திய வசனம் என்கிற உணர்வோடு கையாளுங்கள். மனிதனின் பாவத்தை உணர்த்தி அவனைக் கர்த்தரின் வழியிலும், பரிசுத்த வாழ்க்கையிலும் வழிநடத்த வேதம் மட்டுமே இன்று நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த சத்திய வேதத்தை அறியாமையினாலும், அசட்டுத்தனத்தினாலும், சோம்பேரித்தனத்தினாலும் பிரசங்கிக்கிறவர்கள் சிதைத்துப் பிரசங்கிக்கும்போது ஆத்துமாக்களுக்கு எந்தவித ஆத்துமப் பயனும் கிடைப்பதில்லை. அத்தோடு தொடர்ந்தும் மக்கள் இருட்டிலேயே இருக்கவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. வேத வெளிச்சமில்லாத ஜனங்களும், நாடும் வரண்ட பாலைவனத்தைவிட மோசமான ஆத்மீகப் பாலைவனமாகும்.*






எங்கள் கிராமத்தில் எல்லா கிறிஸ்தவர்களும் வந்து படிப்பதற்கு வசதியாக எங்கள் சபையில் ஒரு நூலகம் இருந்து வருகிறது. தயவு செய்து ஆரம்ப முதல் இதுவரையுள்ள அனைத்து திருமறைத்தீப இதழ்களையும் அனுப்பி உதவ தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

*– போதகர் டேவிட், தமிழ்நாடு, இந்தியா*



இயேசுவின் நாமத்தில் வணக்கங்கள். திருமறைத்தீபத்தைத் தொடர்ந்து வாசித்து வரும் வாசகன் நான். பத்திரிகையைத் தொடர்ந்து எனக்கு அனுப்பி வருவதற்காக நன்றி. கர்த்தருக்கே எல்லா துதிகளும் உரித்தாகட்டும்.

*– போதகர் சிரில் பாஸ்கர், குஜராத், இந்தியா*




2003ல் இருந்து உங்களுடைய பத்திரிகையைப் பெற்று வாசித்து வருகிறேன். நாங்கள் அளித்து வருகின்ற ஆக்கங்களுடையதும், செய்திகளினுடையதும் சிறப்பான அம்சங்களை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. நிச்சயமாக அநேகருடைய வாழ்க்கையை அவை மாற்றி அமைக்கும். போலிப் போதனைகளை இணங்கண்டு எதிர்த்து நிற்பதற்குத் தேவையான நல்ல போதனைகளை பத்திரிகை எனக்கு அளித்திருக்கிறது. கர்த்தருக்காக உங்களுடைய மிகவும் அவசியமான பணி தொடர வேண்டும்.

*– பிரேம்குமார், தமிழ்நாடு, இந்தியா*

## முன்னைய இதழ்கள் பற்றிய அறிவிப்பு:

*முதல் முதலாக பத்திரிகையைப் பெற்று வாசிக்கின்ற வாசகர்கள் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களையும் அனுப்பிவைக்க முடியுமா, என்று அடிக்கடி எழுதிக் கேட்டு வருகிறார்கள். உண்மையில் அப்படி எனக்குத் தெரிந்த எந்தப் பத்திரிகையும் ஆரம்பத்திலிருந்து வெளியிடப்பட்ட இதழ்களை அனுப்பித் தருவதில்லை. அப்படி மறுபதிப்புச் செய்து அனுப்பிவைப்பதென்பது அதிகமான செலவேற்படுத்தும் காரியம். அச்சிடும் செலவு மட்டுமல்லாமல், தபால் செலவும் மிக அதிகம். கர்த்தருடைய கிருபையினால் இந்த ஊழியத்தில் ஆர்வமுள்ள ஒருவரின் உதவியால் நாம் பழைய இதழ்களை மறுபடியும் அச்சிட்டு வைத்திருக்கிறோம். படிக்க வேண்டும் என்று கேட்டு எழுதுகிறவர்களுக்கு அவற்றை அனுப்பி வருகிறோம். இருக்கின்ற இதழ்கள் அனைத்தும் முடிவடைந்தவுடன் மறுபடியும் அவற்றை அச்சிடும் எண்ணம் எங்களுக்கு இல்லை. இருப்பவற்றை நாம் பல வருடங்களுக்குத் தொடர்ந்து வைத்திருப்பதையும் விரும்பவில்லை. ஆகவே, ஆரம்பத்திலிருந்து வெளிவந்த இதழ்கள் இல்லாத வாசகர்கள், அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் தயவுசெய்து உடனடியாக சரியான முகவரியை பின்கோட்டுடன் எழுதி எங்களுக்கு அனுப்பி வைக்கவும். 2008ம் ஆண்டுக்குப் பிறகு பழைய இதழ்களை அனுப்பிவைப்பதை நிறுத்திக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம். – ஆசிரியர்.*




வேதபூர்வமான ஆத்மீக ஆய்வுக் கட்டுரைகளையும், கிறிஸ்தவ திருச்சபை வரலாற்றையும், சீர்திருத்த விசுவாச அறிக்கை மற்றும் வினாவிடைகளுக்கான விளக்கவுரைகளையும், தற்கால கிறிஸ்தவம் சந்தித்துவரும் சவால்களை வேதரீதியில் ஆராய்ந்து விளக்கும் ஆக்கங்களையும், திருச்சபைப் போதக ஊழியத்தில் இருந்துவருகிறவர்களுக்கும், பிரசங்கிக்கும் பொறுப்பை சுமக்கிறவர்களுக்கும் அவசியமான போதனைகளடங்கிய ஆக்கங்களையும் இன்னும் பல பயனுள்ள விஷயங்களையும் தாங்கி வெளிவந்துகொண்டிருக்கிறது திருமறைத்தீபம் பத்திரிகை. பத்திரிகை இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. இதனை வாசித்துப் பயனடைய விரும்புகிறவர்கள் கீழ்வரும் முகவரிகளோடு தொடர்பு கொண்டு பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிடைக்குமிடம்:**


**இவாஞ்ஜெலிக்கள் பாப்திஸ்து சபை**

57 / 2, டி. பி. கே மெயின் ரோடு, பைகாரா, மதுரை 625004

தொலைபேசி எண்: 9994181010

**கிருபை இலக்கிய சேவை**

19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா

மலர் 14 | ஜீலை - செப்டெம்பர் 2008 | இதழ் 3

1. ஜோன் சார்ள்ஸ் றைல்

2. மலைப்பிரசங்கம்

3. அரசியல் சுனாமி

4. வேத வெளிச்சமில்லாமல் வேதப்பிரசங்கமா!

5. எண்ணங்கள்

Terau Print